Registered as a Newspaper பக்கங்கள் 6 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

The Eelanaatham மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 புரட்டாதி 27 13-10-94 வியாழக்கிழமை ஓசை 237

## மழைகால நோய்களை தடுப்பதற்கு மக்களை ஒத்துழைக்க கோரிக்கை

மழை காலங்களில் ஏற்படும் நோய்களை தவிர்ப்பதற்கு பொதுமக்களை ஒத்துழைக்குமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி கோரியுள்ளார்- இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் வழமையாக மழை காலங்களில் குடல் சார்ந்த நோய்களும், நுளம்பு, இலையான் போன்ற நோய் காவிகளினால் பரவும் நோய்களும் அதிகரிக்கும்- இவற்றில் குறிப்பாக வயிற்றோட்டம், நெருப்புக் காய்ச்சல், மலேரியா, மூளைக்காய்ச்சல் போன்றவைகூடிய ஆபத்தானவை- இவற்றைத் (6ஆம் பக்கம் பார்க்க)

## இன்று சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பம்

# காலையில் அரசாங்கத் தரப்பு பிரதிநிதிகள் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் புறப்படுவர்

## மாலையில் முதற் சுற்றுப் பேச்சுக்கள்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளுக்கும், சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் இன்று ஆரம்பமாகவுள்ளது. இதில் பங்குபற்றும் அரசாங்கத்தரப்புப் பிரதிநிதிகள் குழு, இன்று காலை 7.00 மணியளவில், இரத்மலானை விமான நிலையத்தில் இருந்து, யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்படவுள்ளதாக அரச வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேசமயம், யாழ். வரும் அரசாங்கத்தரப்பு பிரதிநிதிகளுக்கும் விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் மாலையில் முதற் சுற்றுப் பேச்சுக்கள் நடைபெறும் எனக் கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவிக்கின்றது.

யாழ்ப்பாணம் வரவுள்ள அரசாங்கத்தரப்பு பிரதிநிதிகளின் விஜயம் பற்றி கொழும்பில் நேற்று மாலை செய்தியாளரிடம் பேசிய தகவல் துறை அமைச்சின் செயலாளரான லயனல் பெர்னாண்டோ, யாழ். வரும் அரச தரப்பு பிரதிநிதிகள் இன்று காலை 7.00 மணியளவில் இரத்மலானை விமான நிலையத்திலிருந்து புறப்படுவார்கள் எனத் தெரிவித்தார்.

இதே சமயம் பிரதமரின் செய்தி எதுவும் யாழ்ப்பாணம் எடுத்துச் செல்கின்றீர்களா எனச் செய்தியாளர் ஒருவர் கேட்டதற்கு பிரதமரின் வாழ்த்துச் செய்தியையே எடுத்துச் செல்கிறோம் எனப் பதில் அளித்தார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## அரச தரப்பு குழுவிற்கு மதத்தலைவர்கள் ஆசி

## 'ஒஷியன் ரேப்' கப்பல் மட்டுமே ஆழம் குறைந்த கடலில் செல்லும்

### கப்பலின் முகவர் தகவல்

வெற்றிலைக்கேணி கடலில் மூழ்கடிக்கப்பட்ட ஒஷியன் ரேட் கப்பல் மட்டுமே வெற்றிலைக்கேணி இராணுவ முகாமிற்கு அண்மையில் உள்ள ஆழம் குறைந்த கடலினுள் செல்லக்கூடிய ஒரேயொரு கப்பல் என இக் கப்பலின் முகவர் தெரிவித்துள்ளார்.

ஆழம் குறைந்த கடலில் செல்லக்கூடிய இக் கப்பல் திருகோணமலை - யாழ் தீவுப் பகுதி சேவையிலும் சில சமயங்களில் ஈடுபட்டதாக அவர் கூறியுள்ளார்.

## 30000 பேர் பலி

இனப் பிரச்சினை தோன்றிய காலம் தொட்டு 30000 பேர் பலியாகியிருப்பதாக ரூபவாஹினி தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் இந்த ஆண்டு மட்டும் பாதுகாப்பு செலவினங்களுக்காக 2,300 கோடி ரூபா பயன்படுத்தப் பட்டுள்ளது எனவும் அது மேலும் தெரிவித்தது.

## மீனவரை சுற்றி வளைக்க கடற்படையினர் முயற்சி

(வடமராட்சி)

வடமராட்சிக் கடலில் தொழில் செய்து கொண்டிருந்த மீனவர்களை சிறிலங்கா கடற்படையினர் வளைத்துப் பிடிக்க முயற்சித்த போது

யில் இருந்து கடற்படையினர் மீனவர்களை வளைத்துப் பிடிக்கும் நோக்கில் அதிவேகமாக வந்தனர். இதனை அவதானித்த மீனவர்கள் (6ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்த கட்டம் பற்றி

விடுதலைப் புலிகளுடன்

தலைவர்கள் மக்களை கோரி

கப்பலின் முகவர் தகவல்

வெற்றிலைக்கேணி கடலில் மூழ்கடிக்கப்பட்ட ஓஷியன் ரேட் கப்பல் மட்டுமே வெற்றிலைக்கேணி இராணுவ முகாமிற்கு அண்மையில் உள்ள ஆழம் குறைந்த கடலினுள் செல்லக்கூடிய ஒரேயொரு கப்பல் என இக் கப்பலின் முகவர் தெரிவித்துள்ளார்.

ஆழம் குறைந்த கடலில் செல்லக்கூடிய இக் கப்பல் திருகோணமலை - யாழ் தீவுப் பகுதி சேவையிலும் சில சமயங்களில் ஈடுபட்டதாக அவர் கூறியுள்ளார்.

## 30000 பேர் பலி

இனப் பிரச்சினை தோன்றிய காலம் தொட்டு 30000 பேர் பலியாகியிருப்பதாக ரூபவாஹினி தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் இந்த ஆண்டு மட்டும் பாதுகாப்பு செலவினங்களுக்காக 2,300 கோடி ரூபா பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும் அது மேலும் தெரிவித்தது.

# மீனவரை சுற்றி வளைக்க கடற்படையினர் முயற்சி

(வடமராட்சி)

வடமராட்சிக் கடலில் தொழில் செய்து கொண்டிருந்த மீனவர்களை சிறிலங்கா கடற்படையினர் வளைத்துப் பிடிக்க முயற்சித்தபோது மீனவர்கள் கடலில் குதித்து நீந்திக் கரைக்கு வந்து சேர்ந்தனர்.

வடமராட்சிக் கடலில் கடற்படையினரின் ரோந்து நடவடிக்கை நேற்று அதிகாலை முதல் காலை 7.00 மணிவரை தீவிரமடைந்திருந்தது- கடற்படையினர் அங்கு மிங்குமாக கடலில் ஓடித் திரிந்தனர்-

நேற்றுக் காலை 7-00 மணியளவில் வடமராட்சி வடக்கு கடற்பரப்பில் மீனவர்கள் தொழில் செய்து [கொண்டிருந்தபோது காங்கேசன்துறையில் இருந்து கடற்படையினர் மீனவர்களை வளைத்துப் பிடிக்கும் நோக்கில் அதிவேகமாக வந்தனர். இதனை அவதானித்த மீனவர்கள்

(6ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச செஞ்சிலுவை ஊடாக

# வட-கிழக்கிற்கான உதவி நோர்வே வழங்கும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு பகுதிகளுக்கு நோர்வே செஞ்சிலுவைச் சங்க உதவிகள் வடக்கு-கிழக்கு பகுதிகளிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்க கிளைகளினூடாக அனுப்பி வைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க தலைமையகத்தின் கணக்குகள் திருப்தியற்று இருந்ததால் இதற்கான உதவிகள் நோர்வே செஞ்சிலுவைச் சங்கத்தினால் நிறுத்தப்பட்டு

(6ஆம் பக்கம் பார்க்க)

# சந்திரிகாவை ஆதரிக்க இ. தொ. கா. முடிவு

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் சந்திரிகா குமாரதுங்கவை ஆதரிப்பது என ஏகமனதாக முடிவெடுத்துள்ளது. கண்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற இ. தொ.கா கூட்டத்தில் இம் முடிவு எடுக்கப்பட்டது.

நாட்டில் சமாதானத்தை மீண்டும் நிலைநாட்டவும் ஜனநாயக முறையில் அரசியல் தீர்வுகாணவும் வாழ்க்கை செலவு குறைப்பிற்கும் பொ. ஐ.மு அரசு எடுக்கும் ஆக்கபூர்வ நடவடிக்கையை இ. தொ.கா ஆதரிப்பதாகவும்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது'

## பலாலியில் செய்தியாளர்

(யாழ்ப்பாணம்)

பலாலி படைத்தளத்தில் காத்திருந்த செய்தியாளர் குழுவினர் இன்று காலை காங்கேசன்துறை பருத்தித்துறையூடாக யாழ் நகருக்கு வந்துசேர்வார்கள்.

கொழும்பில் இருந்து நேற்றுக் காலை விமான மூலம் பலாலிக்கு வந்துசேர்ந்த இக் குழுவினர் 'பலாலிப் படைத்தளத்தில் காத்திருந்தனர்.

(எ), (நி)

## சகல திணைக்கள தலைவர்களையும்

# தத்தமது அலுவலகத்திற்கு சமுகமளிக்கப் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள சகல திணைக்கள தலைவர்கள் பதவிநிலை உத்தியோகத்தர்களும் தத்தமது அலுவலகங்களிற்கு இன்று தொடக்கம் தவறாது சமுகமளிக்கும் வண்ணம் கேட்கப்பட்டுள்ளனர்.

அரசாங்கத்தின் சார்பில் பேச்சுவார்த்தைக்கு வரும் பிரதிநிதிகள் இம்மாவட்டத்தின் தற்போதைய நிலைபற்றியும். மக்களுடைய பிரச்சினைகள் பற்றியும் அலுவலகங்களுடன் கலந்துரையாடுவதற்குச் சந்தர்ப்பம் உண்டென எதிர்பார்க்கப்படுகிறது. எனவே பேச்சுவார்த்தை நடைபெறும் 13-ம் 14-ம் திகதிகளில் தாங்கள் தங்களது அலுவலகத்தில் சமுகமளிக்கும்படியும் சம்பந்தப்பட்ட அரசுதரப்பு பிரதிநிதிகளுக்கு தேவைப்படும் புள்ளி விபரங்கள், மற்றும் விவரங்களை நேரடியாகவோ அல்லது கலந்துரையாடல் மூலமோ சமர்ப்பிப்பதற்கு ஆயத்தமாக இருக்கும்படி செயலகத்தின் திட்டப் பணிப்பாளர் செ. பத்மநாதன் அறிக்கை ஒன்றின் மூலம் கேட்டுள்ளார். (இ(

கத்தரப்புப் பிரதிநிதிகள் குழு, இன்று காலை 7.00 மணியளவில், இரத்மலானை விமான நிலையத்தில் இருந்து, யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்படவுள்ளதாக அரச வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேசமயம். யாழ். வரும் அரசாங்கத்தரப்பு பிரதிநிதிகளுக்கும் விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் மாலையில் முதற் சுற்றுப் பேச்சுக்கள் நடைபெறும் எனக் கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவிக்கிறது.

யாழ்ப்பாணம் வரவுள்ள அரசாங்கத்தரப்பு பிரதிநிதிகளின் விஜயம் பற்றி கொழும்பில் நேற்று மாலை செய்தியாளரிடம் பேசிய தகவல் துறை அமைச்சின் செயலாளரான லயனல் பெர்னாண்டோ, யாழ் வரும் அரசதரப்பு பிரதிநிதிகள் இன்று காலை 7.00 மணியளவில் இரத்மலானை விமான நிலையத்திலிருந்து புறப்படுவார்கள் எனத் தெரிவித்தார்.

இதே சமயம் பிரதமரின் செய்தி எதுவும் யாழ்ப்பாணம் எடுத்துச் செல்கின்றீர்களா எனச் செய்தியாளர் ஒருவர் கேட்டதற்கு பிரதமரின் வாழ்த்துச் செய்தியையே எடுத்துச் செல்கிறோம் எனப் பதில் அளித்தார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

# அடுத்த கட்டம் பற்றி பேச்சுக்களே தீர்மானிக்கும்

## அரசாங்க தரப்பு தகவல்

(கொழும்பு)

சமாதான முயற்சிகளின் அடுத்த கட்டம் பற்றி. இன்று ஆரம்பமாகும் பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றத்திற்கு ஏற்றபடி தீர்மானிக்கப்படும் என அரசாங்கம் கூறுவதாக ரூபவாஹினி தெரிவித்துள்ளது-

இன்று காலை அரசாங்க தரப்பு பிரதிநிதிகள் யாழ்ப்பாணம்புறப்படுவார்கள் எனவும் ரூபவாஹினி தெரிவித்தது-

# அரச தரப்பு குழுவிற்கு மதத்தலைவர்கள் ஆசி

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுகளை ஆரம்பிக்கும் பொருட்டு யாழ்; புறப்படும் அரச தரப்பு குழுவினருக்கு மதத் தலைவர்கள் நல்லாசிகள் வழங்கியதாக சிறிலங்கா வானொலி நேற்று தெரிவித்தது.

சமாதானப் பேச்சுகள் ஆரம்பிக்கும் இன்றைய தினத்தை விசேடபிரார்த்தனை தினமாக அனுஷ்டிக்கவும் இம்மத தலைவர்கள் மக்களை கோரியுள்ளதாக அவ் வானொலி மேலும் தெரிவித்தது.

## விபத்தில் ஒருவர்பலி

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டின் பல்வேறு இடங்களில் நேற்று இடம்பெற்ற ஐந்து வீதிவிபத்துக்களில் ஒருவர் பலியானார்: நால்வர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்-

கைதடியைச் சேர்ந்த சின்னையா வீரசிங்கம் (வயது 52) என்பவரே மரணமானவராவார்- இவர் பயணம் செய்த மோட்டார் சைக்கிளும் லொறியும் புங்கன் குளம் சந்திக்கருகாமையில் விபத்துக்

(6ஆம் பக்கம் பார்க்க)

# அரசு - புலிகள் பேச்சுவார்த்தைக்கு இந்தியா இடையூறாக இராது

## இந்திய வெளியுறவு இணைஅமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை இனப் பிரச்சினை தீர்வு குறித்த பேச்சுக்களில் இந்தியா இடையூறுகளை செய்யாது என இந்திய வெளியுறவு இணையமைச்சர் சல்மான்குர்ஷித் பி-பி-ஸி க்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்-

இலங்கை இனப் பிரச்சினை நீடிப்பதால் இந்தியாவிற்கு எந்த நன்மையும் இல்லை- மேலும் இப் பிரச்சினையாலேயே ராஜீவ் காந்தியைக் கூட இந்தியா இழந்தது- இந் நிலையில் சமாதானத்திற்காக இலங்கையில் நடைபெறும் பேச்சுகளில் இந்தியா ஒருபோதும் குறுக்கிடாது சமாதானப் பேச்சுகளுக்கு வேண்டிய உதவிகளை வழங்க இந்தியா தயாராக உள்ளது- புதிய அரசுடன் நாம் நல்லுறவை பேணவே விரும்புகிறோம்-

சமாதானம் எவ்வாறு பெறப்படும், எவ்வளவு விரைவில் சமாதானம் கிடைக்கும் சமாதானத்திற்காக என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பவை குறித்து இந்தியா சிறிலங்கா அரசிடம் எந்த மேலதிக தகவல்களையும் எதிர்பார்க்கவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்-

# சாகரவர்த்தனா தளபதி விடுவிக்கப்படுவாராம்

## ரூபவாஹினி வெளியிடும் தகவல்

(கொழும்பு)

சாகரவர்த்தனா யுத்தக் கப்பல் தகர்ப்பின்போது புலிகளால் போர்க் கைதியாக பிடிக்கப்பட்டகப்டன் கொமாண்டர் பொயா கொடவும், இன்னும் ஐந்து பொலிசாரும் இன்று பேச்சுக்கள் நடைபெறும்போது புலிகளால் விடுவிக்கப்படுவார்கள் என ஊர்ஜிதமற்ற தகவல்கள் தெரிவிப்பதாக ரூபவாஹினி அறிவித்துள்ளது-

(6 ஆம் பக்கம் பார்க்க)

## உருவப் படங்கள் உள்ளே--

வங்கக் கடலில்கடந்த வருடம் அக்டோபர் மாதம் வரலாறாகிய ஆறு கடற் புலிகளினதும் உருவப்படங்கள் இன்றைய ஈழநாதம் தினசரியுடன் இணைக்கப்பட்டுள்ளது.

# மணலாற்றில் அதிரடி; 7 இராணுவத்திலர் பலி

(கொழும்பு)

மணலாற்றில் நேற்று விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஏழு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. மணலாற்றில் உள்ள சிங்களக் குடியேற்றம் ஒன்றிற்கு ட்ராக்டர் ஒன்றில் படையினர் சென்றபோதே விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதாக தெரிவிக்கப்பட்டது.

## வரி விளம்பரம்

### சித்திர வகுப்புகள்

கலையகத்தின் புதிய சித்திர வகுப்புகள் விஜயதசமி தினத்தன்று (14-10-94) மாலை 3 மணிக்கு ஆரம்பமாகும் இல, 6 பென்டிக்கோஸ் வீதி, கச்சேரியடி, யாழ். (9643)

### மிருதங்க வகுப்பு

தரமான ஆசிரியர் மூலம் சனி,ஞாயிறு மிருதங்க வகுப்பு நடைபெறுகின்றது. விரும்பியோர் தொடர்பு கொள்ள வேண்டியது: கோவிந்தபிள்ளை விஜயகுமார் 192/1 நாவலர் வீதி, பெருமாள் கோவிலடி யாழ்ப்பாணம் (9653)

### தவறிவிட்டது

11-10-94 அன்று யாழ் பேருந்து நிலையத்தில் எனது அடையாள அட்டையும் (442040869v உச்சியோடை மானிப்பாய்) ஒரு தொகைப் பணமும், மக்கள் வங்கிக் காசோலையும் அடங்கிய பேர்ஸ் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (9660)

### விற்பனைக்கு

6 மாதம் நிரம்பிய முட்டை இடும் கோல்டன் கொமட் சில்கி கங்கேரியன் பிறாமாஸ் பன்டம், பாமாஸ், வாவடிக்கல் கோழிகளும், கூடும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- 42 அம்பாள் வீதி நாயன்மார்கட்டு [9669]

### தென்னம்நாற்றுக்கள்

உடன் நடுகைக்கு உகந்த நல்லரக தென்னம் நாற்றுக்கள் சாதாரணம், செவ்விளனி வத்தாவி இனங்கள் விற்பனைக்குண்டு மு.காங்கேசு ஐயா கடையடி கண்டி வீதி மீசாலை, [9666]

### தவறிவிட்டது

12/10/94 அன்று ம. சச்சிதானந்தம் என்பவருடைய கைச்சங்கிலி (பவுண்) கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ இராம

---

## சேவைநலன் பாராட்டு

ஆசிரியர் செ. பேரம்பலம் அவர்கள்
(வீரசிங்கம் ம. வி, மீசாலை)

சங்கரத்தை தந்த தலைவன் சமூகவியல்
பொங்கு தமிழில் படிப்பித்த-பங்கமிலாக்
கல்விமான் மிக்க கருத்துடனே சேவை செய்த
செல்வமகன் வாழ்க செழித்து

முப்பது ஆண்டுகள் ஆசிரிய சேவையின் பின் 55 வயதில் இளைப்பாறும் அன்னாருக்கு எமது பாராட்டுக்கள் - வாழ்த்துக்கள்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.
பா. அ. சபை-வீரசிங்கம் ம.வி மீசாலை.
(9668)

---

## ஸப்தஸ்வரா இசைமன்றம் விஜயதசமி இசைவகுப்புகள்

ஓகன் ட்றம்ஸ்
கிற்றார் தபேலா
வயலின்
வகுப்புகள் ஆரம்பமாகும்

காலம் : 14-10-94 வெள்ளி
நேரம் :- பி. ப. 3 மணி - 6 மணிவரை

இத்துடன் ''கலாவித்தகர்'' கண்ணதாசனின்
மிருதங்க வகுப்புகள் ஆரம்பமாகும்

தொடர்பு:- ஸப்தஸ்வரா இசைமன்றம்
150, இராசா டீசல் மேல்மாடி
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்
(9664)

---

## தனியார் கல்வி நிறுவனங்களின் உதவு தொகை வழங்கல்

மேற்படி விடயம் தொடர்பாக நடைமுறையில் இருந்துவந்த திகதியில் தனியார் கல்வி நிர்வாகப்பிரிவு மாற்றம் செய்துள்ளது. அதன்படி இனிவரும் காலங்களில் செயல்படுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்;

வலிகாமம் - 22-ம் தேதி - 26-ம் தேதி
காலை 9-00 - பி. ப 5-00
வடமராட்சி - 27-ம் தேதி - 28-ம் தேதி
காலை 10-00 - பி. ப. 4-00
தென்மராட்சி - 29-ம் தேதி - 30-ம் தேதி
காலை 10-30 - பி. ப. 4-00

பொதுச்செயலாளர்
யாழ்மாவட்டம்

---

தீவுப்பகுதிக்கு கடமையாற்றச் சென்ற

# கிராம சேவையாளரை ஈ. பி. டி. பி. தடுத்தது

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதியில் தமது கடமைகளைப் பொறுப்பேற்கச் சென்ற 16 கிராம சேவகர்களையும் ஈ. பி. டி. பி யினர் திருகோணமலையில் வைத்து அங்கு செல்ல தடைவித்துள்ளனர் என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

இதனை அடுத்து இப் 16 கிராம சேவகர்களும் திருகோணமலையில் மிகுந்த சிரமத்துடனும்ஏமாற்றத்துடனும் அங்குள்ள விடுதிகளில் தங்கியுள்ளனர் என தெரியவருகின்றது.

தீவுப்பகுதிகளில் ஈ. பி. டி. பியினரினால் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட கிராம சேவகர்களின் வேலைகள் பறிபோவதை விரும்பாத ஈ. பி. டி. பியினர் மேற்படி கிராம சேவகர்களை அங்கு செல்ல தடைவிதித்துள்ளனர் என தெரியவருகின்றது.

மேற்படி கிராம சேவையாளர்குழு கடந்த ஆறாம் திகதி பருத்தித்துறையில் இருந்து திருகோணமலை சென்று அங்கிருந்து தீவுப் பகுதிகளுக்குச் செல்ல ஏற்பாடாகியிருந்ததுஎன்பதுகுறிப்பிடத்தக்கது. (பா, தி)

---

## யாழோசையின் விஜயதசமி ஆரம்ப வகுப்புகள்

கிற்றார்
வயலின்
ஓகன்
புல்லாங்குழல்
மலோடிக்கா
டிறம்

ஆகிய புதிய வகுப்புகள் விஜயதசமி
[14-10-94 வெள்ளி]
அன்று மாலை 4. 30 மணிக்கு ஆரம்பமாகின்றன

யாழோசை மன்றம்,
ஆனைப்பந்தி. (9604)

---

## தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் அவை நடாத்தும் மாபெரும் கலை நிகழ்ச்சி

சஞ்சிகை வெளியீட்டு நிதிக்காக

18.09.94 இல் நடாத்தப்படவிருந்து பிற்போடப்பட்ட கலைநிகழ்ச்சி எதிர்வரும் 15.10.94 சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு இடம்பெறும்

இடம்: தொழில்நுட்பக் கல்லூரி மைதானம்

நிகழ்ச்சிகள்:

### வீரதீர நிருபிப்புக்கள்

அன்றும் இன்றும்



---

## நினைவு கூருகின்றோம்...

### 13. 10. 1994

1987-ம் ஆண்டு இதேதினத்தில் கோப்பாயில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**பிறேமன்** (சோமசுந்தரம் இளங்கோ-சாரதாவீதி, சங்கத்தானை-சாவகச்சேரி யாழ்)

யாழ்ப்பாணத்தில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். அன்றூ** (மு- கிங்ஸ்லி-சொக்குத்தொடுவாய்-மணலாறு)

**அமல்** (நிக்கலஸ் அருள்வாசன்-பரப்புக்கடந்தான், வட்டக்கண்டல்-மன்னார்)

**நியூமன்** (சிற்றம்பலம் பாஸ்கரன்-ஆலங்கேணி, பூநகரி-மன்னார்)

**2-ம் லெப். நவாஸ் ரவி** (பழனிவேல் ரவீந்திரன் -வல்வெட்டித்துறை)

**2 ம் லெப். சந்திரன்** (இராசதுரை ஜெயச்சந்திரன்-திருநெல்வேலி - யாழ்)

**2-ம் லெப். சண்**(ஜெகராசா ஜெடசிலன் சண்வீதி -வேலம்பராய், தச்சன்தோப்பு-யாழ்]

யாழ்-கோண்டாவில், காரைக்கால் பகுதியில் இந்தியப்படையினரின் எறிகணைத்தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**அக்பர்** (அருணாசலம் பாலகுமார் - கலைவாணிவீதி, கோண்டாவில் வடக்கு]

**ராஜன்** [இராசதுரை இலங்கேஸ்வரன்-தாவடி, கொக்குவில்-யாழ்]

யாழ்-சுன்னாகத்தில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளர், நாடக நெறியாளர்

**வி. எம். குகராசா**

1988-ம் ஆண்டு கொக்குவில், கேணியடிப்பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**கப்டன் கரிகாலன்** [பொன்னம்பலம் கௌரிபாலன் -வரணி வடக்கு, கொடிகாமம்-யாழ்)

யாழ்-காங்கேசன்துறைவீதியில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**டிஸ்கோரவி** [அருளானந்தன் ரவி]

1991-ம் ஆண்டு முல்லைத்தீவு 4ம் கட்டை சிறிலங்கா இராணுவமினிமுகாம் தகர்ப்பின்போது வீரச்சாவெய்திய,

**லெப். நேசன்** [சின்னத்தம்பி சற்குணசீலன்-முள்ளியவளை-முல்லைத்தீவு]

**லெப். சூரி - கிரி** (மாரிமுத்து வசந்தகுமார்-4ம் வட்டாரம், வேலணை-யாழ்)
(தற்போதைய முகவரி மறவன்புலோவீட்டுத்திட்டம்)

1993-ம் ஆண்டு மன்னார்-பூநகரிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட திடீர்ச்சமரில் வீரச்சாவெய்திய,

டர்பு:- 42 அம்பாள் வீதி
நாயன்மார்கட்டு [9669]

### தென்னம்நாற்றுக்கள்

உடன் நடுகைக்குகந்த நல்லரக தென்னம் நாற்றுக்கள் சாதாரணம், செவ்விளனி வத்தாவி இனங்கள் விற்பனைக்குண்டு மு.காங்கேசு ஐயா கடையடி கண்டி வீதி மீசாலை, [9666]

### தவறிவிட்டது

12/10/94 அன்று ம. சச்சிதானந்தம் என்பவருடைய கைச்சங்கிலி (பவுண்) கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ இராமகிருஷ்ண மகாவித்தியாலயம், பரமேஸ்வராச்சந்தி, முடமாவடிச்சந்திக்கிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும்.
[9667]

### பாதுகாப்பு கூடு புனரமைப்பு

சுன்னாகத்திலிருந்து புன்னாலைக்கட்டுவன் வரையிலான வீதியோர மரங்களின் பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டிருந்த சேதமடைந்த கூடுகள் அண்மையில் சிரமதானம் மூலம் புனரமைக்கப்பட்டுள்ளன.

தியாகி திலீபன் நினைவாக மேற்கொள்ளப்பட்ட இச் சிரமதானப் பணியில் கிராமிய உற்பத்திக்குழு உறுப்பினர்களும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பணியாளர்களும் கலந்து கொண்டனர்.

### கலை விழா

சர்வோதயமும் வல்லியகனந்தம் சனசமூக நிலையமும் இணைந்து நடாத்தும் வல்லியானந்தம் பாலர் பாடசாலையில் நாளை பிற்பகல் 2.00 மணிக்கு கலைவிழா நடைபெறவுள்ளது. (யோ)

### நவராத்திரி விழா

நாகேஸ்வரம், அளவெட்டி தெற்கு சிறிநாகவரத நாராயணர்தேவஸ்தானத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை நவராத்திரி விழாவின் இறுதிநாள் நிகழ்வான விஜயதசமி பூசை நடைபெறும்.

மறுநாள் 15-ம் திகதி சனிக்கிழமை காலை ஏகாதசித் தீர்த்தம் நடைபெற இருக்கிறது.
(21)

## உதவு தொகை வழங்கல்

மேற்படி விடயம் தொடர்பாக நடைமுறையில் இருந்துவந்த திகதியில் தனியார் கல்வி நிர்வாகப்பிரிவு மாற்றம் செய்துள்ளது. அதன்படி இனிவரும் காலங்களில் செயல்படுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

வலிகாமம் - 22-ம் தேதி - 26-ம் தேதி
காலை 9-00 - பி. ப 5-00
வடமராட்சி - 27-ம் தேதி - 28-ம் தேதி
காலை 10-00 - பி. ப. 4-00
தென்மராட்சி - 29-ம் தேதி - 30-ம் தேதி
காலை 10-30 - பி. ப. 4-00

பொதுச்செயலாளர்
யாழ்மாவட்டம்

தனியார் கல்வி நிறுவன
ஒன்றியம்

(சி-10504)

## இறுதி அறிவித்தல்

### சிமெந்து கட்டிட தொழிலாளர் சங்கம்

யாழ் மாவட்டம்

07-09-94 ல் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டின் பரிசுக்கான இலக்கங்கள்:

1 வது 9099 2வது 1463 3வது 4911

ஆறுதல் பரிசு இலக்கம்

1)503 2)3715 3)2863 4)4839 5)9

பரிசுக்குரிய பொருட்களை 13-10-94 தொடக்கம் 31-10-94 வரை பெற்றுக் கொள்ளவும். இறுதிக் கால எல்லை என்பதை அறியத்தருகிறோம்.

இப்படிக்கு
நிர்வாகம்
(9663)

### தமிழீழ நீதிமன்றத்துக்கான முறைநிறைவேற்றுநர் (பிஸ்கால்) பணிநிலைக்கான வெற்றிடம்

தமிழீழ நீதி நிர்வாகத்துறையின் கீழ் இயங்கும் யாழ். மாவட்டத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணம், சுன்னாகம், சாவகச்சேரி, பருத்தித்துறை ஆகிய தமிழீழ மாவட்ட நீதிமன்றங்களுக்கு மேற்படி பணிநிலைக்கான விண்ணப்பங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் தகைமையுடைய ஆண்களிடமிருந்து கோரப்படுகின்றது-

கல்வித் தகைமை :- க.பொ.த (சா/த) சித்தி
வயதெல்லை :- 18 - 30 வரை

விண்ணப்பங்கள் செய்ய விரும்புபவர்கள் தமது சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தை கீழ் குறிப்பிடும் முகவரிக்கு 29-10-1994 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறுவேண்டப்படுகின்றனர்.

பொறுப்பாளர்
நடுவப் பணியகம்,
தமிழீழ நீதி நிர்வாகத்துறை,
தமிழீழம்.

(சி-10505)

## கலை நிகழ்ச்சி

சஞ்சிகை வெளியீட்டு நிதிக்காக

18.09.94 இல் நடாத்தப்படவிருந்து பிற்போடப்பட்ட கலைநிகழ்ச்சி எதிர்வரும் 15.10.94 சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு இடம்பெறும்

இடம்: தொழில்நுட்பக் கல்லூரி மைதானம்

நிகழ்ச்சிகள்:


### வீரதீர நிரூபிப்புக்கள்



அன்றும் இன்றும்
என்றும்

மங்காப் புகழ் வாய்ந்த
பருத்திநகர் தந்த
பெருந்திறன் சான்றோன்

சாண்டோ
**M. துரைரத்தினம்**
அவர்களும் அவரது
மாணாக்கரதும் வீரதீர
நிரூபிப்புக்கள்



★ **குழந்தை ம. சண்முகலிங்கம்**
அவர்களின்
'எந்தையும் தாயும்' நாடகம்;
நெறியாள்கை: திரு. க. திலகநாதன்

★ **கலாசேஸ்திரா மாணவிகள்**
வழங்கும்
'செம்பு நடனம்'

பிறவுண் வீதி,
கொக்குவில். (9672) மாணவர் அவை

யாழ்-காங்கேசன்துறைவீதியில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**டிஸ்கோரவி** [அருளானந்தன் ரவி]

1991-ம் ஆண்டு முல்லைத்திவு 4ம் கட்டை சிறிலங்கா இராணுவமினிமுகாம் தகர்ப்பின்போது வீரச்சாவெய்திய,

**லெப். நேசன்** [சின்னத்தம்பி சற்குணசீலன்-முள்ளியவளை-முல்லைத்தீவு]

**லெப். சூரி - கிரி** (மாரிமுத்து வசந்தகுமார்-4ம் வட்டாரம், வேலணை-யாழ்)
(தற்போதைய முகவரி மறவன்புலோவீட்டுத்திட்டம்)

1993-ம் ஆண்டு மன்னார்-பூநகரிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட திடீர்ச்சமரில் வீரச்சாவெய்திய,

**கப்டன் அருளரசன்** (கணேசன் கருணாநிதி-களுவாஞ்சிக்குடி-மட்டு)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும் கடற்பரப்பிலும் தேசவிரோதிகளாலும் சிறிலங்காப் படையினராலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

சி/10499

## 6ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்:
30. 5. 1969

தாயகவிடிவில்:
13. 10. 1988

**கப்டன் கரிகாலன்**
(பொன்னம்பலம் கௌரிபாலன்)

காலத்தை வென்றவனே கரிகாலா! கௌரிபாலா!
தமிழீழத்தின் திக்குகள் எங்கும் நீ நேசித்தவர்கள்
எங்களுடன் உன் வடிவில்-
மீண்டும் நீ விரைந்து வந்துவிடு- காத்திருக்கிறோம்

வரணி வடக்கு, உன் நினைவில் வாழும்
வரணி. குடும்பத்தினர்.

(9662)

## கிளிநொச்சி மீது படைஎடுப்பு;

# 18,000 துருப்புக்கள் தயாராய் இருந்தனவாம்

(கொழும்பு)

இம் மாதம் முதலாம் திகதி ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து சுமார் 18 ஆயிரம் துருப்புகள் கிளிநொச்சி நோக்கி நகரத் திட்டமிட்டிருந்ததாகவும் இந் நடவடிக்கைக்கு ஒபரேஷன் ரெயின்போ எனவும் பெயரிடப்பட்டிருந்ததாகவும் சண்டேலீடர் பத்திரிகையின் பாதுகாப்புச் செய்தியாளர் இக்பால் அத்தாஸ் குறிப்பிட்டுள்ளார்;

திட்டமிடப்பட்ட இந்த ரெயின்போ நடவடிக்கை தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், ஆறுவாரங்களாக இந் நடவடிக்கைக்கு திட்டமிடப்பட்டது. இந் நடவடிக்கையின் நோக்கம் ஆனையிறவு முகாமிலிருந்து எட்டு மைல் தூரத்திற்கு முன்னேறுவதாகும்; எனினும் இந் நடவடிக்கை ஆரம்பிக்கப்படுவதற்கு ஒரு சில தினங்களுக்கு முன்பாக நிறுத்தப்பட்டது யாழ்ப்பாணத்திற்கு அரசு பிரதிநிதிகள் சமாதானப்பேச்சுகள் நடத்த செல்ல இருப்பதால் போர் நடவடிக்கை பாதகவிளைவை ஏற்படுத்தலாம்என பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு எண்ணி நடவடிக்கையை நிறுத்துமாறு பணித்தது;

இந்த இராணுவ நடவடிக்கை மேஜர் ஜெனரல் ஒ. எம்.யூ. செனிவிரட்ன தலைமையில் நடைபெறவிருந்தது.

நடவடிக்கை ஆரம்பிக்க ஒரு வாரத்திற்கு முன்புவரை நடவடிக்கையைமேற்கொள்ள அரசின் அனுமதி கிடைக்கும் என அதிகாரிகள் மத்தியில் நம்பிக்கை இருந்தது. மாரி காலத்திற்கு முன்பாக இந் நடவடிக்கையை பூர்த்தி செய்வதில் அவர்கள் ஆர்வமாக இருந்தனர்: ஆனால் நடவடிக்கையை நிறுத்துமாறு பணிப்பு வந்தது. ஆனையிறவு, வெற்றிலைக்கேணி முகாம்களுக்கு வடக்கு-கிழக்குமுகாம்களிலிருந்து வந்து குவிந்த படையினர் வாபஸ் பெறப்பட்டு மீளத் தம் முகாம்களுக்கு திரும்பினர் எனினும் படை அதிகாரிகளுக்கு மட்டுப்படுத்திய நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சுயதொழில்கடன்

கிராமிய பொருளாதாரத்தினை மேம்படுத்தும் நோக்குடன் வறுமைச் சூழலில் சிக்கித் தவிக்கும் மக்களின் நலன்கருதி வடமராட்சிப் பகுதியிலுள்ள 71 பயனாளிகளுக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் சுயதொழில் கடன் வழங்கியுள்ளனர்.

அல்வாய் வடமத்தி. புலோலி வடமேற்கு, புலோலி தென் மேற்கு, தும்பளை, நெல்லியடி, கரணவாய் ஆகிய கிராமங்களில் வாழும் பயனாளிகளுக்கே ஒருவருக்கு தலா 10,000 ரூபா வீதம் மொத்தம் 7,10,00 ரூபா கடன்கள் வழங்கப்பட்டன.

## ஆண்டு விழா

பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கியின் 15-வது ஆண்டுப் பூர்த்தி விழா வங்கி முகாமையாளர் திரு: க.கமலசேகரம் தலைமையில் இரண்டு நாட்கள் மிகச்சிறப்பாக நடைபெற்றன. அரசதிணைக்கள அதிகாரிகள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் உட்பட பொது மக்களும் தேசிய சேமிப்பு வங்கியின் இவ்விழாவிலே கலந்து கொண்டனர். [25]

## இனப்பிரச்சினை குறித்து

# சந்திரிகாவுடன் பகிரங்க விவாதத்திற்குகாமினிதயார்

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவுடன் பிரதான ஐந்து விடயங்கள் தொடர்பாக பகிரங்க விவாதத்திற்கு தான் தயாராக இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரும்

இது தொடர்பாக கடிதம் ஒன்றை பொது ஜன ஐக்கிய முன்னணியின் பொது செயலாளர் தி,மு. ஜயரட்னாவுக்கு அனுப்பியுள்ளதாகவும் நாட்டின் இனப்பிரச்சினை தொடர்பாக பொது ஜன ஐக்கிய முன்னணியின் நிலைப்பாட்டை மக்களுக்கு தெரிய

# புலிகளுடன் பேச சிறிலங்கா அரசு இந்தியாவிடம் ஒப்புதல் பெற்றது

அரச உயர் அதிகாரி தகவல்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கும், அரசுக்கும் இடையிலான இவ் வாரம் ஆரம்பமாகவுள்ள பேச்சுக்களிற்காக இந்தியாவின் ஆதரவை, சிறிலங்கா அரசு பெற்றுள்ளது என அரசு உயரதிகாரி ஒருவர் கொழும்பு சண்டே ஒப்சேவர் பத்திரிகைக்கு தெரிவித்தார்;

கடந்த சில வாரங்களில், கொழும்புக்கும், டில்லிக்கும் இடையில் நடந்த உயர்நிலை தகவல் பரிமாற்றங்கள் இரகசியமாக நடந்ததை தொடர்ந்தே இவ் அறிவிப்பு வெளியாகியுள்ளதாகவும் அவ் இதழ் தெரிவித்துள்ளது.

புலிகளுடனான அரசின் பேச்சுக்கான முதனிலை ஏற்பாடுகள் பற்றியும் இந்திய அரசுக்கு தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும், பேச்சுக்களுக்கு தடையாக இந்தியா இருக்க மாட்டாது எனவும் அவ்வதிகாரி தெரிவித்தார்;

தகவல் தொடர்புகள் அமைச்சின் செயலாளரும், விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களில் அரசின் சார்பில் கலந்து கொள்ளவிருப்பவருமான லயனல் பெர்னாண்டோ அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் செய்தபோது இந்திய வெளியுறவு அமைச்சின் உயரதிகாரிகளையும் சந்தித்திருந்தார். லயனல்பெர்னாண்டோ இந்தியாவுக்கு சென்ற சில தினங்களில், இலங்கைக்கான இந்திய தூதுவர் நரேஷ்வர் தயாள் டெல்லிக்கு சென்றிருந்ததையும் அப் பத்திரிகை சுட்டிக் காட்டியுள்ளது.

எனினும், இந்தியத் தூதரகம் இது தொடர்பாக எதுவும் தெரிவிக்கவில்லை எனவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது;

# பாஸ்கரலிங்கத்தின் சுகவீனம் நீடிக்கிறது

(கொழும்பு)

முன்னாள் நிதியமைச்சின் செயலாளர் பாஸ்கரலிங்கம் தாம் சுகவீன முற்றுள்ளதால் லண்டனிலிருந்து இலங்கை திரும்ப முடியாத நிலையில் உள்ளதாக நிதியமைச்சிற்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

நிதியமைச்சின் கீழ் உள்ள திறைசேரியில் முன்னாள் ஐ.தே.க. அரசின் காலத்தில் பெரும் நிதி மோசடி நடைபெற்றுள்ளதாக வெளியான தகவல்களை தொடர்ந்து பாஸ்கரலிங்கத்தின் இக் கடிதம் கிடைத்துள்ளது.

# வட- கிழக்கு யுத்தத்தால் முழு நாட்டுக்கும் பாதிப்பு

கொழும்பு பத்திரிகை தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் தற்போது நடைபெறும் யுத்தம் வடக்கு கிழக்குப் பகுதிகளில் மட்டும் அன்றி இன்று முழு நாட்டுக்கும் பாதிப்பை ஏற்படுத்தியிருப்பதாக பொதுஜன ஐக்கிய முன்னணி கருதியதாலே யுத்தத்தை சமாதான பேச்சுக்கள் மூலம் தீர்க்க வந்துள்ளதாக ''லங்காதீப'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

நாடு முழுவதிலும் பரந்த இவ் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவது இந்த நாட்டில் சிறியோர் முதல் முதியோர் வரையிலானவர்களின் விருப்பம்என்றும் எனவேதான் இதனை பொதுஜன ஐக்கிய முன்னணி தீர்க்க முன்வந்ததாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை இந்த யுத்தம் இவ்வளவு தூரம் மோசமடைவதற்கான முக்கிய காரணம் சென்ற அரசாங்கத்தில் ஏற்படுத்தப்பட்ட கெடுபிடிகள் தான் என்றும் அப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

# தையிட்டிப் பகுதியிலிருந்து மூவர் விடுவிப்பு

(வடமராட்சி)

தையிட்டி பகுதியில் சிறிலங்காஇராணுவம்சுற்றிவளைத்த போது கைதான மூவர் விடுவிக்கப்பட்டு நேற்றுமுன் தி

திருஞானேஸ்வரன் (34) ஆகியோரே விடுவிக்கப்பட்டவர்களாவர்.

இவர்கள் 1992 ஆம் ஆண்டு சுற்றிவளைப்பின்

## நூல்வெளியீடு

(வடமராட்சி)

கலாநிதி நா ஞானகுமாரனின் சைவசித்தாந்த தெளிவு நூல் வெளியீட்டுவிழா எதிர் வரும் 18ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு வைத்திய கலாநிதி எம் கே.முருகானந்தன் தலைமையில் வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (யோ)

## தமிழீழ சட்டக்கைநூல் வெளிவந்துள்ளன

தமிழீழ நீதி நிர்வாகத் துறையினரால் வெளியீடு செய்யப்பட்ட 1994-ம் ஆண்டின் 2-ம்,3-ம் எண் திருத்தச் சட்டங்கள் யாழ்நகரில் உள்ள பிரபல புத்தகசாலைகளான தமிழ்த்தாய், பூபாலசிங்கம், ஸ்ரீகாந் போன்றவற்றில் பெற்றுக்கொள்ள ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இச்சட்டக்கைநூல்களில் 1993-ம் ஆண்டின் 01-ம், 02-ம், 05-ம் எண் சட்டங்களுக்கான முக்கிய பல திருத்தங்களும், மேன்முறையீட்டு நீதிமன்ற நடவடிக்கைச் சட்டம் பற்றிய விபரங்களும் அடங்கியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது;

## பொருள்கள் இறக்கப்பட்டன

(வடமராட்சி)

காங்கேசன்துறையில் தரித்து நின்ற 'சோமாரி' கப்பல் நேற்று முன்தினம் பருத்தித்துறை துறைமுகத்திற்குகாலை வந்துசேர்ந்தது.

கப்பல் வந்ததும் பொருள்கள் இறக்கும் வேலைகள் நடைபெற்றன. கடந்த இரண்டு தினங்களாக பருத்

## சுகாதார அமைச்சு வாகனம் மீள வழங்கப்படவில்லை

(கொழும்பு)

முன்னாள் சுகாதார அமைச்சர் பாவித்த வாகனங்கள் இதுவரை மீளளிக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

ஐ.தே.கட்சி அரசாங்கத்தில் சுகாதார அமைச்சராக இருந்த ரேணுகா ஹேரத் பாவித்த அரச வாகனங்கள் இதுவரை திருப்பிக் கொடுக்கப்படவில்லை என சிங்கள நாளிதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

# உண்டியல்களின் வட்டி அரசாங்கத்தால் குறைப்பு

(கொழும்பு)

அரசாங்கம் திறைசேரி உண்டியல் களிற்கான வட்டி வீதத்தைக் குறைத்துள்ளது.

அரசு தமக்குத்தேவையான மேலதிக நிதியினை பெற்றுக்கொள்வதற்காக திறைசேரி உண்டியல்களை சந்தையில் விற்பனை செய்து பணத்தைப் பெற்றுக்கொள்ளும். உண்டியல்கள் முதிர்வடைந்ததும் வட்டியுடன் பணத்தை செலுத்தி மீண்டும் உண்டியல்களைக் கொள்வனவு செய்யும் இதன் போது அவ் உண்டியல்களிற்கு 15% வட்டி செலுத்தப்பட்டு வந்தது இவ் வட்டி வீதமானது தற்பொழுது $12\frac{1}{2}\%$ மாக அரசினால் குறைக்கப்பட்டுள்ளது.

இதனால் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்பவர்களின் அளவு குறைவடைந்து நாட்டில் பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் தன்மை குறைவடையும் என பொருளியல் ஆய்வாளர் தெரிவிக்கின்றனர்

இதற்கான வட்டி வீதம் கடந்த வருடத்தில் 22%மாக இருந்து சில முறை குறைக்கப்பட்டுள்ளது.

உலகத்திலேயே வட்டி வீதங்கள் அதிகமாக உள்ள நாடு இலங்கை தான் என மேலும் தெரிவிக்கின்றனர். (இ)

# தமிழீழ பொதுத் தேர்வுகள் அடுத்த மாதம் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ முதனிலை இளநிலைப் பொதுத் தேர்வுகள் அடுத்த மாதம் நடைபெறவுள்ளன- ஆண்டு 5 மற்றும் ஆண்டு 8 வகுப்பு மாணவர்களுக்கு இந்தத் தேர்வு நடத்தப்படும்-

அடுத்த மாதம் 4-ம் திகதி முதல் 9-ம் திகதிவரை எழுத்துத் தேர்வும் 10-ம் திகதியும் 11-ம் திகதியும் விஞ்ஞான பாடச் செயன் முறை தேர்வும் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது-

சங்கீதம், நடனம், வாழ்க்கைத்திறன் மற்றும் தொழில் நுட்பப் பாடம் ஆகியனவற்றின் தேர்வினை ஏற்கனவே திட்டமிட்டபடி நடத்திமுடிக்க ஒத்துழைக்குமாறும் தமிழீழக் கல்வித் தேர்வு ஆணையாளர் கேட்டுள்ளார்-

# வைப்புகளுக்கான வட்டி வங்கிகளால் குறைப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரச வர்த்தக வங்கிகள் வாடிக்கையாளரின் வைப்புக்களுக்கான வட்டி வீதத்தை குறைத்துள்ளது; இக்குறைப்பானது 1/10/94 இல் இருந்து அமுலுக்கு வந்திருப்பதாக வங்கி அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அரச வர்த்தக வங்கிகளான இலங்கைவங்கி, மக்கள்வங்கி ஆகியன வாடிக்கையாளர் வைப்பிலிடும் பணத்திற்கான வட்டிவீதம் ஒரு வீதத்தினால் குறைக்கப் பட்டுள்ளது இக்குறைப்பு சகலவகையான வைப்புகளுக்கும் நடைமுறையில் இருந்த வீதத்தில் இருந்து ஒருவீதத்தினால் குறைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது;

இவ்வருடம் ஆவணிமாதம் புதிய அரசு பதவி ஏற்றதன் பின்னர் இரண்டாவது முறையாக வட்டிவீதம் குறைக்கப் பட்டுள்ளது:

வாடிக்கையாளர் வங்கியில் பெறும் கடன்களிற்கு வட்டி வீதம் குறைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

காலத்திற்கு முன்பாக இந் நடவடிக்கையை பூர்த்தி செய் வதில் அவர்கள் ஆர்வமாக இருந்தனர்: ஆனால் நடவடி

நிதிகள் உட்பட பொது மக்களும் தேசிய சேமிப்பு வங்கியின் இவ்விழாவிலே கலந்து கொண்டனர். [25]

இனப்பிரச்சினை குறித்து

# சந்திரிகாவுடன் பகிரங்க விவாதத்திற்கு காமினி தயார்

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவுடன் பிரதான ஐந்து விடயங்கள் தொடர்பாக பகிரங்க விவாதத்திற்கு தான் தயாராக இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான காமினி திசாநாயக்கா தெரிவித்துள்ளார்,

இது தொடர்பாக கடிதம் ஒன்றை பொது ஜன ஐக்கிய முன்னணியின் பொது செயலாளர் தி, மு. ஜயரட்னாவுக்கு அனுப்பியுள்ளதாகவும் நாட்டின் இனப்பிரச்சினை தொடர்பாக பொது ஜன ஐக்கிய முன்னணியின் நிலைப்பாட்டை மக்களுக்கு தெரியப்படுத்துவதே இதன் நோக்கம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வாய்க்குள் கொதிநீருற்றி 20 இளைஞர்கள் கொலை

(கொழும்பு)

இராணுவப் புலனாய்வு அதிகாரி ஒருவரும், அரசியல்வாதி ஒருவரும் இணைந்து ஐ. தே. க. ஆட்சிக் காலத்தில் 20 இளைஞர்களை வாய்க்குள் கொதிநீரை ஊற்றி கொன்றமை தற்போது தெரியவந்திருப்பதாக வெரித்தாஸ் சிங்கள சேவை தெரிவித்துள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள பனாமுல்லை இராணுவ முகாமில் வைத்தே இவர்கள் பலத்த சித்திரவதைகளின் பின் கொல்லப்பட்டதை நேரில் கண்டவர்கள் தற்போது தெரிவித்திருப்பதாகவும் வெரித்தாஸ் சிங்கள சேவை மேலும் தெரிவித்தது.

கொல்லப்பட்ட இளைஞர்கள் உயிரோடிருப்பதாக கூறி அவர்களை விடுதலை செய்ய பணம் தருமாறும், கொலைப்பட்ட இளைஞர்களின் உறவினர்களிடமிருந்து மோசடி செய்யப்பட்டிருப்பதும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது,

ஆயுதக் கோஷ்டியால் கடத்தப்பட்ட

# தமிழ் இளைஞர் சடலமாக மீட்கப்பட்டார்

(கொழும்பு)

மட்டக்களப்பு ஏறாவூர் பகுதியில் மரப்பாலம் என்ற இடத்தில் இரு வாரங்களுக்கு முன்பு ஆயுதம் தாங்கிய கோஷ்டி ஒன்றினால் கடத்தப்பட்ட இரு தமிழ் வாலிபர்களில் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் இன்னொருவர் காயமடைந்த நிலையில் செங்கலடி சந்தியில் காணப்பட்டார்.

38 வயதான குமாரசாமி கதிரவேல் என்பவர் சடலமாகவும், 28 வயதான தாமோதரம்பிள்ளை சிவகணநாதன் காயமுற்ற நிலையிலும் மீட்கப்பட்டவர்களாவர்,

# உர வகைகளின் விலை திங்கள் முதல் குறைப்பு

(கொழும்பு)

புதிய அரசாங்கம் அறிவித்த உரமானியத் திட்டம் கடந்த திங்கள் முதல் அமுலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இதன்படி 50 கிலோ யூரியா பக்கட்டின் விலை 55 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது; 50 கிலோ சேற்றுப் பசளையின் விலை 26 ரூபா 50 சதத்தினாலும், காய்ப் பசளை 50 கிலோ 44 ரூபா 50 சதத்தினாலும் குறைக்கப்பட்டுள்ளன; இலங்கை உர நிறுவனத்தின் நாடு முழுவதிலுமுள்ள கிளைகளிலிருந்து புதிய விலைகளில் உர வகைகளைப் பெறலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டுக்கும் பாதிப்பை ஏற்படுத்தியிருப்பதாக பொதுஜன ஐக்கிய முன்னணி கருதியதாலே யுத்தத்தை சமாதான பேச்சுக்கள் மூலம் தீர்க்க வந்துள்ளதாக ''லங்காதீப'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

நாடு முழுவதிலும் பரந்த இவ் யுத்தத்தை முடிவுக்கு முன்னணி தீர்க்க முன்வந்ததாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை இந்த யுத்தம் இவ்வளவு தூரம் மோசமடைவதற்கான முக்கிய காரணம் சென்ற அரசாங்கத்தில் ஏற்படுத்தப்பட்ட கெடுபிடிகள் தான் என்றும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

ஆண்டின் 01-ம், 02-ம், 05-ம் எண் சட்டங்களுக்கான முக்கிய பல திருத்தங்களும், மேன்முறையீட்டு நீதிமன்ற நடவடிக்கைச் சட்டம் பற்றிய விபரங்களும் அடங்கியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# பொருள்கள் இறக்கப்பட்டன

(வடமராட்சி)

காங்கேசன்துறையில் தரித்து நின்ற 'சோமாரி' கப்பல் நேற்று முன்தினம் பருத்தித்துறை துறைமுகத்திற்கு காலை வந்துசேர்ந்தது.

கப்பல் வந்ததும் பொருள்கள் இறக்கும் வேலைகள் நடைபெற்றன. கடந்த இரண்டு தினங்களாக பருத்தித்துறையில் பொருள்களை இறக்க கடற்படையினர் அனுமதி மறுக்கப்பட்டிருந்ததும் தெரிந்ததே. (யோ)

# தையிட்டிப் பகுதியிலிருந்து மூவர் விடுவிப்பு

(வடமராட்சி)

தையிட்டி பகுதியில் சிறிலங்கா இராணுவம் சுற்றிவளைத்த போது கைதான மூவர் விடுவிக்கப்பட்டு நேற்று முன்தினம் யாழ் வந்து சேர்ந்தனர்

பொன்னம்பலம் துரைசாமி (55) ஆறுப்பிள்ளை சின்னையா (75), செல்லையா திருஞானேஸ்வரன் (34) ஆகியோரே விடுவிக்கப்பட்டவர்களாவர்.

இவர்கள் 1992 ஆம் ஆண்டு சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டவர்கள் மூவரும் சுகயீனமடைந்த நிலையில் வந்து சேர்ந்தனர்

# விரும்பியோ விரும்பாமலோ இந்தியாவின் உதவி அவசியம்

## ஜனாதிபதி வேட்பாளர் ரணசிங்க

(கொழும்பு)

நாம் விரும்புகின்றோமோ இல்லையோ வடக்கு-கிழக்கு பிரச்சினை தீர்விற்கு இந்தியாவின் உதவி அவசியம் இந்தியா பிரிவினையை விரும்பவில்லை. சமஷ்டி தீர்வே தான் முன்வைப்பது-இவ்வாறு இம்முறை ஜனாதிபதி தேர்தலில் சுயேட்சையாக போட்டியிடும் முன்னாள் தகவல்துறை இராஜாங்க அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்க பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

சமஷ்டி என்பது அழகான சொல். ஆனால் பண்டா செல்வா ஒப்பந்தத்தின் பின் இது இலங்கையில் ஒரு அழுக்கான சொல்லாகிவிட்டது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் இன்று ஆட்சியிலிருக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசையும் நாம் பாதுகாக்கவேண்டும். அக்கட்சியின் சின்னமான நாற்காலியின்மீது யானை அமரமுடியுமா? அப்படியமர்ந்தால் அதுசுக்குநூறாகிவிடும். எனது சின்னம் அன்னப்பட்சி. அதுதான் நாற்காலி மீது ஜோராக அமரலாம். அது நாற்காலிக்கு பெருமை யூட்டுவதாக அமையும், அத்துடன் அந்த அரசும் பாதுகாக்கப்படும்.

நான் ஜனாதிபதியானால் இன, மத பேதமற்ற ஆட்சிக்கு வழிவகுப்பேன். நான் ஆடம்பரமான வழியில் ஆதரவு திரட்டமாட்டேன். மக்கள் என்பக்கம் இருக்கும் போது நான் ஏன் சுவரொட்டிகளை அச்சடித்து வீதிவீதியாக ஒட்டி அலங்கோலப்படுத்த வேண்டும். தொலைக்காட்சி, சந்திகள், பாடசாலைகளில் மக்களை சந்தித்து உரையாடுவேன் பொதுக்கூட்டம் நடத்தினால் குண்டுகள் அங்கு வெடிக்கும், பத்து, பதினைந்து பேர் உயிரிழக்க நேரிடும் இது அவசியம்தானா?

சமஷ்டி ஆட்சிமுறையே இந்த நாட்டிற்குச் சிறந்தது சமஷ்டி என்றால் என்ன என்று தெரியாது பலர் குழம்புகின்றனர். அமரர் பண்டாரநாயகா கூட சமஷ்டி ஆட்சிமுறையில் நம்பிக்கை வைத்திருந்தார். இதன் அடிப்படையில்தான் பண்டா - செல்வா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. காமினிக்கு ஹேமா ஆதரவளிப்பது எனக்கு வேதனை தருகிறது என அவர் கூறினார்.

# தாயாரின் நினைவு இடத்தில் அஞ்சலி செலுத்த விருப்பம்

## லயனல் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தகவல் அமைச்சின் செயலாளரும், லேக்ஹவுஸ் நிறுவனத்தின் பணிப்பாளரும் முன்னாள் யாழ். அரசாங்க அதிபருமான லயனல் பெர்னாண்டோ யாழ்ப்பாணத்தில் தமது தாயார் அடக்கம் செய்யப்பட்ட இடத்திற்கு மலர் தூவி அஞ்சலி செய்வார் எனத் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வரும் அரசப் பிரதிநிதிகள் குழுவில் திரு. லயனல் பெர்னாண்டோவும் அடங்குவார் என்பது தெரிந்ததே.

இவர் யாழ். அரச அதிபராக பதவி வகித்த காலத்தில் மரணமான தமது தாயாரின் நினைவு இடம் சென்று அஞ்சலி செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி வடக்கு-கிழக்கு மாகாணசபையின் பிரதம செயலாளர் திரு. கணேசநாதன் யாழ். செயலகத்திற்கு தெரியப்படுத்தியுள்ளார். இதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுள்ளார்.

புனித பத்திரிசியார் கல்லூரிக்கு அருகாமையில் இவ் நினைவிடம் உள்ளது. (தி) (பா).

# வைப்புகளுக்கான வட்டி வங்கிகளால் குறைப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரச வர்த்தக வங்கிகள் வாடிக்கையாளரின் வைப்புக்களுக்கான வட்டி வீதத்தை குறைத்துள்ளது. இக்குறைப்பானது 1/10/94 இல் இருந்து அமுலுக்கு வந்திருப்பதாக வங்கி அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அரச வர்த்தக வங்கிகளான இலங்கைவங்கி, மக்கள்வங்கி ஆகியன வாடிக்கையாளர் வைப்பிலிடும் பணத்திற்கான வட்டிவீதம் ஒரு வீதத்தினால் குறைக்கப்பட்டுளது இக்குறைப்பு சகலவகையான வைப்புகளுக்கும் நடைமுறையில் இருந்த வீதத்தில் இருந்து ஒருவீதத்தினால் குறைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வருடம் ஆவணிமாதம் புதிய அரசு பதவி ஏற்றதன் பின்னர் இரண்டாவது முறையாக வட்டிவீதம் குறைக்கப்பட்டுள்ளது.

வாடிக்கையாளர் வங்கியில் பெறும் கடன்களிற்கு வட்டிவீதம் குறைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# அகதிகளை அனுப்புவதில் சுவிஸ் அரசு ஈடுபட்டுள்ளது

92-ம் ஆண்டுக்குப் பின்னர் சுவிட்ஸ்லாந்துக்குப் சென்றவர்களை உடனடியாக திருப்பியனுப்பும் நடவடிக்கைகளை சுவிஸ் அரசு எடுத்து வருகின்றது. அண்மையில் சுவிஸிலிருந்து திருப்பியனுப்பப்பட்ட சுண்ணாகத்தை சேர்ந்த நபரொருவர் எமது தென்மராட்சி செய்தியாளரிடம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சுண்ணாகத்தைச் சேர்ந்த சுப்பையா கிருஷ்ணமூர்த்தி என்பவர் மேலும்தெரிவிக்கையில், கடந்த ஒன்றரை வருடங்களாக நான் சுவிஸில் தங்கியிருந்தேன்; அங்கு முதல் 8மாதங்கள், முகாமொன்றில் தங்க வைக்கப்பட்டேன். அங்கு பதின்மூவாயிரம் ரூபா வரை தந்தார்கள். பின் வேலை கிடைத்தது அச் சமயம், நாட்டைவிட்டு வெளியேறுமாறு பணிப்பு எனக்கு விடுக்கப்பட்டது. எனது சம்பளமும் நிறுத்தப்பட்டது. எனினும் சட்டத்தரணி ஒருவரை எனது தரப்பில் பேச வைத்தேன் அதனைத் தொடர்ந்து ஏப்ரல் 95 வரை தங்க அனுமதிக்கப்பட்டேன்.

ஆனால், கடந்த மாதம் 19-ந் திகதி நான் தங்கியிருந்த அறைக்கு வந்த சுவிஸ் பொலிசார், என்னைக் கைது செய்து, 36மணிநேரம் தடுப்புக் காவலில் வைத்தபின், இலங்கைப் பணத்தில் பத்தாயிரம் ரூபாவை தந்து கொழும்புக்கு விமானமூலம் அனுப்பி வைத்தனர். எனது சட்டைப் பையிலிருந்த பேனா கூட எடுத்துவர அனுமதிக்கப்படவில்லை.

எனது நிலையை போலவே பலருக்கு சுவிஸைவிட்டு வெளியேறுமாறு பணிப்புக்கள் விடுக்கப்பட்டுள்ளன. இதனால் பலர், இலங்கைக்குதிருப்பியனுப்பப்படவுள்ளனர்- எனவும் அவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்- (86)

## வடக்கில் பலியாகும் மக்கள் பற்றி சிந்தித்தனரா?

### லூசியன் ராஜகருணாநாயக்கா கேள்வி

(கொழும்பு)

தெற்கில், கொல்லப்பட்ட இளைஞர்களுக்காக இன்று தாய்மார்கள் அழுகின்றனர். இந்த நிலையில் வடக்கில் கொல்லப்படும் மக்களைப் பற்றி யாரேனும் சிந்தித்தார்களா என்று பிரபல பத்திரிகையாளர் லூசியன் ராஜகருணாநாயக்கா கேள்வியெழுப்பியுள்ளார்.

இலங்கை சுடுகாடாக மாறுவதை, எப்போதுமே அனுமதித்துக் கொண்டிருக்கமுடியாது சுபீட்சமான பூமியாக இலங்கை மாறவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## சட்டவிரோத ஆயுதங்கள் 140 வரை கண்டுபிடிப்பு

(கொழும்பு)

சட்டவிரோதமாக ஆயுதங்களை கண்டுபிடித்து அவற்றை பறிப்பதற்காக அமைக்கப்பட்ட விஷேச பொலிஸ்பிரிவினர் இதுவரை நூற்றி நாற்பது ஆயுதங்களை கண்டுபிடித்ததாகதெரிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளை இவ் ஆயுதங்களை வைத்திருந்தகுற்றசாட்டின் கீழ் ஐம்பது பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வீதி விபத்தில் காயமுற்றார்

(யாழ்ப்பாணம்)

தேநீர் அருந்திவிட்டு சின்னக்கடை வீதியைக் கடக்க முயன்ற வயோதிபர் வாகனம் ஒன்றினால் மோதுண்டு படுகாயமடைந்தார்.

மேற்படிவிபத்துக்குள்ளானவர் புங்குடுதீவைச் சேர்ந்த விசுவநாதர் கார்த்திகேசு (வயது 76) என்னும் வயோதிபரே. அத்தியடியில் வசித்து வரும் இவர் கைஎலும்பு முறிந்தும் தலை மற்றும் உடலில் பலகாயங்களுக்கிலக்கான நிலையில் யாழ் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்,

பொதுசன மாதாந்த உதவி தொகையான 90 ரூபாவும் அதற்கான அடையாள அட்டையும் தம் வசமிருந்ததாகவும் விபத்து நடந்த பிறகு அவை காணாமல் போய்விட்டதாக அவர் தெரிவித்தார்.

(ஸி)

## கலைமகள் விழா

யாழ் கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தின் கலைமகள் விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு அதிபர் திருமதி அ. பரிமளா தலைமையில் பூசை வழிபாட்டுடன் நடைபெறும். (24)

★ ★ ★

உதயசூரியன் அறிவகமும் சனசமூக நிலையமும் நடத்தும் வாணி விழா இன்று மாலை ஆறுமணியளவில் இடம் பெறவுள்ளது.

★ ★ ★

இந்திரா நகையகத்தின் ஆதரவில் இளங்கலைஞர் மன்றத்தின் மாதாந்த இசை நிகழ்ச்சியும், வாணி விழாவும் நாளை மாலை மூன்று மணியளவில் மன்றக் கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## வீட்டு மின் சுற்றுக்கள் பரிசீலனை செய்யப்படுகிறது

தென்மராட்சிப் பகுதியில் மின்சாரசபையினர் வீடு வீடாக சென்று மின் சுற்றுக்களை பார்வையிட்டு வருகின்றனர்.

கடந்த ஒரு வாரமாக இச்சோதனை இடம் பெற்று வருகின்றது. வீடுகளில் சென்று ஆளி (மெயின்சுவிட்ச்) மின்குமிழ் (பல்ப்) வயர்கள், பியுஸ் என்பனவற்றை பார்வையிட்டு வருகின்றனர். யாழ்மாவட்டத்திற்கு இலங்கை மின்சார சபையினால் மின் விநியோகம் வழங்கப்படவுள்ளதால் இவ் வேலைகள் துரிதமாக இடம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (86)

## இராணுவ நீதிமன்றில் நிறுத்தப்படுவார்கள்

(கொழும்பு)

ஜப்பான், ஹிரோஷிமாவில் நடைபெறும் ஒலிம்பிக்போட்டியில், கலந்து கொள்ளும் இலங்கை அணியிலிருந்து காணாமற் போனவர்கள் இராணுவ, கடற்படை, பொலிஸ்

## இலங்கைப் பிரஜைகள் என்பதை தமிழரால் ஏற்க முடியாமலுள்ளது

### - பேராசிரியர் சிவத்தம்பி

(கொழும்பு)

யுத்தஎதிர்ப்புணர்வே, சமாதானம் வேண்டுமென்ற நிலையை தந்துள்ளது. புதிய அரசின் நடவடிக்கைகள் இதற்கு முக்கிய காரணமானவை. தற்போது இருதரப்புமே நேர்மையான சமாதானத்தையே எதிர்நோக்குகின்றன. எனவே இந் நிலையில் முழுமையான செயற்பாடுகள் தேவையாகின்றன என பேராசிரியர் கா. சிவத்தம்பி தெரிவித்துள்ளார்.

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்துக்கு அவர் சிங்கள மொழியில் அளித்த பேட்டியொன்றில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது யுத்தம் பல ஆண்டுகளாக தொடர்ந்தாலும் கடந்த மூன்றாண்டுகளாகவே இது உக்கிரமடைந்தது. நாம் கடந்த காலங்களில் நடந்த தவறுகளை மறந்து சமாதானத்துக்கு உழைக்க வேண்டும். பிரச்சினைக்கான அடிப்படையை நன்றாக ஆராய்ந்தாலே, பிரச்சினைக்கு தீர்வு காண முடியும். தமிழ் மக்களிடையே ஏற்பட்ட உணர்வுகள், இலங்கை என்ற நாட்டின் பிரசைகள் என்பதை அவர்களால் ஏற்க முடியாத நிலையைத் தந்தது.

பொருளாதாரத் தடைகள் தமிழ் மக்களுடைய மனங்களில் வடுக்களாக அமைந்தன பேச்சுவார்த்தைகள் நடைபெறும்போது பழைய விடயங்களை மறந்து புதியவற்றை பேச வேண்டும்.

பத்து வருடங்களுக்கும் மேலாக நீடித்த பிரச்சினைக்குதெளிவானதும், நிதானமானதுமான தீர்வை பெற வேண்டும். இந்தப் பிரச்சினை இன்னும் தொடருமானால் பிரச்சினைக்கு தீர்வே காண முடியாமல் போய்விடும்.

இப்போதுசமாதானத்தை வேண்டுவது சாதாரண மக்களே இவர்கள்தான்சமாதானம் பற்றிய கோரிக்கைகளை எழுப்பியுள்ளனர், தீர்வானது எந்த நிர்வாக அமைப்பில் பெறப்படுகின்றது என்பது கவனிக்கப்பட வேண்டும்.

நாங்கள் சிறிலங்கா நாட்டவர்களாக இந்தப் பிரச்சினைக்கான முகங் கொடுக்க வேண்டும் நாங்கள் ஜனநாயகத்துக்கு தலை வணங்குபவர்கள் எனவும் தனது பேட்டியின் போது பேராசிரியர் சிவத்தம்பி மேலும் குறிப்பிட்டார்.

## அதிரடிப்படை முகாமில் கப்பம் கோரப்படுகிறது

மட்டக்களப்பு புலிபாய்ந்தகல் சிறிலங்கா அதிரடிப்படை முகாமில் பொலிஸ் அதிரடிப்படையினரும் ரெலோ தேசத்துரோகிகளும் இணைந்து அவ்வழியால் ஏற்றிவரப்படும் நெல் மூடைகளை பறிமுதல் செய்து வருவதாக தெரியவருகிறது.

இவற்றை ஏற்றிவரும் வாகனங்கள் பொலிசாருக்கும் ரெலோ துரோகிகளுக்கும் கப்பமாக நெல்மூடைகளை செலுத்திய பின்பே பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். இவை பின்னர் தனியார் கடைகளில் தேசத்துரோகிகளால் விற்பனை செய்யப்படுகிறது.

## கண்டெடுப்பு

வீதியில் கண்டெடுக்கப்பட்ட ஆண்களுக்கான கைக்கடிகாரம் ஒன்று எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அலுவலக நேரத்தில் ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளவும்,

## இருநாட்களில் மின்சாரம்

## ஹேமாவின் நியமனம் ரணிலுக்கு அதிருப்தி

(கொழும்பு)

கொழும்பு மத்தி ஐதேக அமைப்பாளராக ஹேமா பிரேமதாசா நியமனம் செய்யப்பட்ட விடயம், கொழும்பு மாவட்ட அமைப்பாளரான முன்னாள் பிரதமர் ரணில்விக்கிரமசிங்காவை கலந்தாலோசனை செய்யாமல் மேற்கொள்ளப்பட்டதா கலங்காதீபபத்திரிகை தெரிவித்துள்ளது,

இந்நியமனம் ஐ.தே.கட்சினுள் மேலும் பூசலைக் கிளப்பியிருப்பதாகவும்-இதுதொடர்பாக, ரணில் விக்கிரமசிங்காவும், முன்னாள் ஐதேகபொதுச்செயலாளர்சிரிசேனகூரேயும் ஒரு மணித்தியாலத்துக்கும் அதிகமாக சந்தித்துபேசியதாகவும் லங்காதீப மேலும் தெரிவித்துள்ளது,

ஓம் நமசிவாய

### அலுவலகத் திறப்பு விழா

நாளை 14.10.94 வெள்ளிக்கிழமை சைவநெறி தழைத்தோங்கவும், சைவப்பிள்ளைகளின் நல்வாழ்வுக்கெனவும் உருவாக்கப்பட்ட 'சத்தியவேத சன்மார்க்க சபையின் அலுவலகம்' கைதடி மேற்கு, மானிப்பாய் வீதியிலுள்ள குமாரசாமி பிறைசூடியின் சன்மார்க்க இல்லத்தில் சபையின் தலைவர் சன்மார்க்க சிவதொண்டர் மூதறிஞர் பண்டிதர் ச. பொன்னுத்துரை அவர்களினால் காலை 9-00 மணிக்கு திறந்து வைக்கப்படும். அன்றைய தினம் சபையின் கொள்கை விளக்கமும், கலந்துரையாடலும் முதல் கூட்டமும் நடைபெறும்.

அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

சைவ அபிமானிகளினதும் தமிழன்பர்களினதும் கூட்டுறவையும், ஆதரவையும் நாடுகின்றோம்.

சைவ வேத சாத்திரங்களைக் கற்க விரும்பும் மாணவ பயிலுநர்களை எம்முடன் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

கு. பிறைசூடி,

சன்மார்க்க இல்லம்,
மானிப்பாய் வீதி,
கைதடி மேற்கு,

(9661)

### விஜயதசமி பூஜையும் நாள் வகுப்பும்

14-10-1994 வெள்ளி மாலை 3.00 - 4.30 மணிவரை நாள் வகுப்புக்கள் ஆரம்பித்து வைக்கப்பெறும்

ஒவ்வொரு சனி, ஞாயிறு நாட்களில் காலை 8.00 -12 00 மணிவரை சிறந்தஇசைக்கலைஞர்களால் வாய்ப்பாட்டு, வயலின், வீணை, மிருதங்கம் பரதநாட்டியம் என்பன பயிற்றுவிக்கப்பெறும்.

மேலும் விபரங்களுக்கு மன்றத் தலைவருடன் தொடர்பு கொள்ளவும்.

ஷ மன்றத்தினர்

### 15-வது ஆண்டு இசைவிழா

தொடர்ந்து பதினைந்து (15) தினங்கள்

குறிப்பு:- இளங்கலைஞர் மன்ற 15-வது ஆண்டு இசைவிழா 10-02-95 - 24-2-95 வரை பதினைந்து தினங்கள் நடைபெறவுள்ளது. இசைவிழாவில் கலந்து நிகழ்ச்சிகள் வழங்க விரும்பும் இளங்கலைஞர்களிடமிருந்து வாய்ப்பாட்டு, வயலின், வீணை, மிருதங்கம், புல்லாங்குழல் என்பவற்றில் தனி, குழு நிகழ்ச்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தங்கள் தகுதியை உறுதிசெய்து 30-11-94 திகதிக்கு முன்னர் தலைவர் இளங்கலைஞர் மன்றம், சட்டநாதர் வீதி, நல்லூர் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

(சி-10502)

தலைவர்
இளங்கலைஞர் மன்றம்

### இளங்கலைஞர் மன்ற மாதாந்தஇசைநிகழ்ச்சியும் வாணி விழாவும்

ஆதரவு:

இந்திரா நகையகம்
181, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இடம்: மன்றக் கலாமண்டபம்
சட்டநாதர் வீதி, நல்லூர்.

காலம்: 14-10-1994 வெள்ளி மாலை 3 மணி

நிகழ்ச்சி நிரல்

மாலை 3-00 - 4-30 விஜயதசமி பூஜையும், வித்தியாரம்பமும்
4-30 - 4-50 பாட்டு: எஸ். லதா, எம். விஜிதா
எஸ். சறோஜினி, பி. சாந்தினி,
எஸ். கங்காநந்தி, எஸ், அஜிதா,
பி. ரங்கநாதன்
ப. உஷா - வயலின்
எம். சஜன் - மிருதங்கம்
4-50 - 5-15 மிருதங்க இசை: எஸ். சிவசிவா,
ஜெ. சங்கர், சி, அகிலன், ஸ்ரீ.
சுதர்சன், கே. மயூரன்

## வீட்டு மின் சுற்றுக்கள் பரிசீலனை செய்யப்படுகிறது

தென்மராட்சிப் பகுதியில் மின்சாரசபையினர் வீடு வீடாக சென்று மின் சுற்றுக்களை பார்வையிட்டு வருகின்றனர்.

கடந்த ஒரு வாரமாக இச் சோதனை இடம்பெற்று வருகின்றது. வீடுகளில் சென்று ஆளி (மெயின்சுவிட்ச்) மின்குமிழ் (பல்ப்) வயர்கள், பியுஸ் என்பனவற்றை பார்வையிட்டு வருகின்றனர். யாழ்மாவட்டத்திற்கு இலங்கை மின்சார சபையினால் மின் விநியோகம் வழங்கப்படவுள்ளதால் இவ் வேலைகள் துரிதமாக இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (86)

## இராணுவ நீதிமன்றில் நிறுத்தப்படுவார்கள்

(கொழும்பு)

ஜப்பான், ஹிரோஷீமாவில் நடைபெறும் ஒலிம்பிக்போட்டியில், கலந்துகொள்ளும் இலங்கை அணியிலிருந்து காணாமற் போனவர்கள் இராணுவ, கடற்படை, பொலிஸ் பிரிவுகளைச்சேர்ந்தவர்கள் என்றும், இவர்கள் கைதாகும் பட்சத்தில், இராணுவ நீதிமன்றத்தில் நிறுத்தப்பட, இலங்கைக்கு கொண்டுவரப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இருநாட்களில் மின்சாரம்

அவசிய நடவடிக்கை பூர்த்தி செய்தால்இருதினங்களில் யாழ் குடாநாட்டிற்கு மின்சாரத்தை வழங்கமுடியும் என இலங்கை மின்சாரசபை பணிப்பாளர் கலாநிதி லெலிஸ் ஹேரத் தெரிவித்துள்ளார்.

---

கிறது.

இவற்றை ஏற்றிவரும் வாகனங்கள் பொலிசாருக்கும் ரெலோ துரோகிகளுக்கும் கப்பமாக நெல்மூடைகளை செலுத்திய பின்பே பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். இவை பின்னர் தனியார் கடைகளில் தேசத்துரோகிகளால் விற்பனை செய்யப்படுகிறது.

## கண்டெடுப்பு

வீதியில் கண்டெடுக்கப்பட்ட ஆண்களுக்கான கைக்கடிகாரம் ஒன்று எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அலுவலக நேரத்தில் ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளவும்.

---

மார்க்க சபையின் அலுவலகம் கைதடி மேற்கு, மானிப்பாய் வீதியிலுள்ள குமாரசாமி பிறைசூடியின் சன்மார்க்க இல்லத்தில் சபையின் தலைவர் சன்மார்க்க சிவதொண்டர் மூதறிஞர் பண்டிதர் ச. பொன்னுத்துரை அவர்களினால் காலை 9-00 மணிக்கு திறந்து வைக்கப்படும். அன்றைய தினம் சபையின் கொள்கை விளக்கமும், கலந்துரையாடலும் முதல் கூட்டமும் நடைபெறும்.

அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

சைவ அபிமானிகளினதும் தமிழன்பர்களினதும் கூட்டுறவையும், ஆதரவையும் நாடுகின்றோம்.

சைவ வேத சாத்திரங்களைக் கற்க விரும்பும் மாணவ பயிலுநர்களை எம்முடன் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

கு. பிறைசூடி,

சன்மார்க்க இல்லம்,
மானிப்பாய் வீதி,
கைதடி மேற்கு,

(9661)

---

### யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்

வரையறுக்கப்பட்டது

# பதவி வெற்றிடம்

## ஆளணி முகாமையாளர்

ஆளணி முகாமையாளருக்கான பதவி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
சம்பள அளவுத்திட்டம் - 113 . 8 வது - (10 வது)
- 1005 - 1705
40 X 5, 50 X 10 இத்துடன் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இதரபடிகளும்

**கல்வித் தகைமைகள்**

1 வது - கூட்டுறவுப் பணியாளர் 09 வது சம்பள அளவுத் திட்டத்தில் காரியாலய உத்தியோகத்தர் பதவியில் 03 வருடங்களுக்கு குறையாத அனுபவம்

அல்லது

மேற்படி பதவியுடன் தொடர்புடைய எழுதுநர் பதவியில் 10 வது சம்பள அளவுத்திட்டத்தில் 06 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

பட்டயம் பெற்றசெயலாளர்கள், நிர்வாகஸ்தர்கள் நிறுவனத்தின் இடைநிலைப்பரீட்சையில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / தொழிற்தாபனம் ஒன்றில் ஆளணி முகாமை நிர்வாக முகாமையில் மேற்பார்வை மட்டத் தரத்தில் 04 வருட காலங்களுக்குக் குறையாத அனுபவம்

அல்லது

கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்) / க- பொ- த- பரீட்சை (உயர்தரம்) இல் 3 பாடங்களிலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக தொழில் தாபனம் ஒன்றில் ஆளணி முகாமை / நிர்வாக முகாமைப் பதவியில் 04 வருடங்களுக்கு குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

பிணைப்பணம் தெரிவு செய்யப்படின் ரூபா 5000/- செலுத்துதல் வேண்டும்.
வயதெல்லை — 18 — 40 வரை.
விண்ணப்பமுடிவுத் திகதி - 24 - 10 - 94 ம் திகதி திங்கட்கிழமை வரை,

குறிப்பு :-

ஏனைய கூட்டுறவுச்சங்கங்களின் பணியாளர்கட்கும் வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது. சங்கத்தினால் ரூபா 10/- ற்கு விற்பனை செய்யப்படும் விண்ணப்ப படிவத்தில் விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும்- சங்க எல்லைப்பரப்பில் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்,

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி - பொது முகாமையாளர்
யாழ்ப்பாணம் ப- நோ- கூ- சங்கம்
291, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

பதில் பொதுமுகாமையாளர்

[சி-10497] 27 - 09 - 1994

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு:
1939. 01. 09

இறப்பு:
1994. 09. 13

---

## இந்திரா நகையகம்

181, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இடம்: மன்றக் கலாமண்டபம்
சட்டநாதர் வீதி, நல்லூர்.

காலம்: 14-10-1994 வெள்ளி மாலை 3 மணி

### நிகழ்ச்சி நிரல்

மாலை 3-00 - 4-30 விஜயதசமி பூஜையும், வித்தியாரம்பமும்

4-30 - 4-50 பாட்டு: எஸ். லதா, எம். விஜிதா
எஸ். சறோஜினி, பி. சாந்தினி,
எஸ். கங்காநந்தி, எஸ், அஜிதா,
பி. ரங்கநாதன்
ப. உஷா - வயலின்
எம். ஜஜன் - மிருதங்கம்

4-50 - 5-15 மிருதங்க இசை: எஸ். சிவசிவா, ஜெ. சங்கர், சி, அகிலன், ஸ்ரீ. சுதர்சன், கே. மயூரன்

5-15 - 5-40 கூட்டுவாத்திய இசை:
திருமதி சுந்தரேஸ்வரி ஜெயக்குமாரனின் மாணவிகள்

5-40 - 7-40 இசைக் கச்சேரி
எஸ். பதிமலிங்கம் - பாட்டு
ஆர். இராதாகிருஷ்ணன் - வயலின்
எ. சந்தானகிருஷ்ணன் - மிருதங்கம்
எம். சிதம்பரநாதன் - கெஞ்சிரா

**7.40 - 8.10 மங்கள விளக்கேற்றல்**

திரு. வ. இராசையா அவர்கள்
(வர்த்தகர்)
திரு. கே. எஸ். விபுலானந்தன் அவர்கள்
(வர்த்தகர் இந்திரா நகையகம்)

தலைமையுரை:
திரு ச. ஸ்ரீரங்கநாதன் அவர்கள்
(விஞ்ஞான ஆசிரிய ஆலோசகர்,
வேலணை கல்விக் கோட்டம்)

பிரதம விருந்தினர் உரை:
தமிழ்த்தேன் செம்மொழிச் செல்வன்
சிவ. மகாலிங்கம் B. A. அவர்கள்
[விரிவுரையாளர், பலாலி ஆசிரிய
பயிற்சிக் கலாசாலை]

**8.10 - 9.40 'பட்டிமன்றம்'**
(பாடலில் பட்டிமன்றம்)
எவர் பாடலில் தத்துவ அர்த்தங்கள் மேலோங்கி நிற்கிறது
நடுவர்: பொன். கணேசமூர்த்தி அவர்கள்

| | |
|---|---|
| கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் | கவிஞர் கண்ணதாசன் |
| கனக. நாகேஸ்வரன் எம் ஏ | எம் எஸ் தயாளன் பி ஏ |
| செ சத்தியமூர்த்தி பி எஸ் ஸி ஜே பி | எஸ் கணேசலிங்கம் பி ஏ |
| பொன் மதிமுகராஜா ஜே பி | க. கணேசலிங்கம் அதிபர் |
| பசு. ஸ்ரீபதி நாடக ஆசிரியர் | எஸ் வாமன் விஞ்ஞான ஆசிரியர் |

பட்டிமன்ற அமைப்பு: பொன் மதிமுகராஜா
எம் ஜி ஆர் இல்லம் தாவடி

கலா ரஸிகர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்!

[சி-10500] மேற்படி மன்றத்தினர்

## சிந்தனைக்கு..

மற்றவர்களுக்கு உரித்தான உரிமைகளை அவர்களுக்கு அளிக்கும் போது நாம் நம் நாட்டிற்குரிய உரிமைகளை நமக்கு வழங்கிக் கொள்கிறோம்;

- ஜான் எஃப் கென்னடி;


# ஈழநாதம்

81, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் 13-10-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2931
தபால்பெட்டி எண்-05


## பூர்வாங்கப் பேச்சுவார்த்தை

நான்கு வருடங்களுக்கு மேலாக நீடித்துவரும் இரண்டாம் கட்ட ஈழ போர் ஒருபுறம் இருக்க மறுபுறம் விடுதலைப்புலிகள் இயக்கப் பிரதிநிதிகளுக்கும்- சிறிலங்கா அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் இன்று ஆரம்பமாகின்றன.

இரண்டு தினங்கள்,- இன்றும் நாளையும்- நடைபெறவுள்ள இப்பூர்வாங்கப் பேச்சுவார்த்தைக்கான நிகழ்ச்சி நிரலும் அரசாங்கத் தரப்பினால் முன் வைக்கப்பட்டுள்ளது; அத்தோடு விடுதலைப்புலிகள் இயக்கமும் சில விடயங்களை தமது நிகழ்ச்சி நிரலில் கொண்டுள்ளதாக அறிய முடிகின்றது; இந்தவகையில் ஆரம்பப் பேச்சுவார்த்தைகள் திட்டமிட்ட சில விடயங்கள் பற்றிப் பேசப்படும் என்பது புலனாகின்றது.

கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் தயாராக இருப்பதாக அறிவித்து வந்த போதும் ஆட்சியில் இருந்த ஐ.தே.க. அரசாங்கம் அதைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை; இனப்பிரச்சினைக்கான தீர்வு இராணுவத் தீர்வு தான் என முடிந்த முடிவாகத் தெரிவித்து வந்தது.

இந்த வகையில் புதிதாகப் பதவிக்கு வந்த பொ. ஐக்கிய முன்னணி அரசாங்கம் சுமார் இருமாத காலத்திற்குள் பேச்சுவார்த்தை மேசைக்கு வந்துவிட்டமை முன்னேற்றகரமானவை மட்டுமல்ல, வரவேற்கத்தக்கதும் ஆகும். நிபந்தனைகள் எதுவுமற்ற பேச்சுவார்த்தைக்குப் பொ. ஐ. முன்னணி அரசாங்கம் தயாராக இருந்தமையே இவ் வெற்றியை அது ஈட்டுவதற்குக் காரணமாகும்.

இந்த ரீதியில் நோக்கும் போது பூர்வாங்கப் பேச்சுவார்த்தைகள் பெரும் நெருக்கடிகள் இன்றி முன்னேறிச் செல்லும் என்றே எதிர்பார்க்க முடிகிறது. ஆனால் இப் பேச்சுவார்த்தையின் எல்லை தொலைவில் உள்ளது மட்டுமல்ல, கடினமானது என்பதும் எவருக்கும் தெரியாத விடயமல்ல;

இந்நிலையில் இன்று ஆரம்பமாகும் பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றமே எதிர்கால பேச்சுவார்த்தைகளுக்கு அடிப்படையாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. இந்த நிலையில் பேச்சுவார்த்தை மிகவும்

# தேசிய வீரனாக பண்டாரவன்னியன்; பிரகடனம் செய்யக் கோரிக்கை

### 'வவுனியா நகரசபை விடுத்தது

வன்னிப் பிரதேச மன்னனாகிய பண்டாரவன்னியனை தேசிய வீரனாகப் பிரகடனம் செய்யக் கோரும் பிரேரணை ஒன்றை வவுனியா நகரசபை ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது;

நகர சபைத்தலைவர் லிங்கநாதன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே இத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. பண்டாரவன்னியனை ஒருதேசிய வீரனாக அங்கீகரிக்க வேண்டும்; இவர் நினைவாக அஞ்சல் முத்திரை ஒன்றும் வெளியிட வேண்டும் எனவும் அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது;

# பிரச்சினைக்கு தீர்வு காணப்படின் படையினர் வெளியேறிவிடுவர்

### பிரிகேடியர் நிஹால் ஜெயக்கொடி

(மட்டக்களப்பு)

வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்படின் நாம் இங்கிருந்து வெளியேறி விடுவோம் படையினர் இங்கு நிரந்தரமாக நிலை கொள்ளக் கூடியதாக எந்த முகாமும் அமைக்கப்படவில்லை

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்டப் பாதுகாப்புஇணைப்பதிகாரி பிரிகேடியர் நிஹால் ஜெயக்கொடி தெரிவித்துள்ளார். மட்டக்களப்பு மாநகர சபை உறுப்பினர்கள் மேயர் தலைமையில் பிரிகேடியரைச் சந்தித்தனர் இதன்போதே பிரிகேடியர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

இச் சந்திப்பின்போது மட்டக்களப்பு மாநகரசபை பிரதேச செயலகக் கட்டடத்தில் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் இயங்கிவருகிறது மாநகரசபையின்சில பிரிவுகள் வெவ்வேறு இடங்களில் இயங்கி வருகின்றன எனவே வரியிறுப்பாளரின் நலன் கருதி தற்போது இராணுவத்தினர் வசமுள்ள மாநகரசபைக் கட்டடத்தை தருமாறு இவர்கள் கோரிக்கை விடுத்தனர் இதற்கு பதிலளித்த பிரிகேடியர், மாநகரசபைக் கட்டடத்தில் தற்காலிகமாகவே இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான ஒரு தீர்வு காணப்பட்டதும் நாம் இக்கட்டடத்தை விட்டு வெளியேறி விடுவோம் எனப் பதிலளித்தார்

## காமினி தோல்வியடைந்தால் தலைமைப் போட்டி ஏற்படும்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் காமினி திசாநாயக்கா தோல்வியுறும் பட்சத்தில், ஐ. தே. கட்சியின் தலைமைப் பதவிக்கு மீண்டும் போட்டிகள் தோன்றும் என கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்,

காமினி திசாநாயக்கா பொதுத்தேர்தலில் ஐ.தே.க- அடைந்த தோல்விக்கு முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை பதவியிறக்கியது போல், ஜனாதிபதி தேர்தலும், காமினியின் அரசியல் தலைமைத்துவத்துக்குதிருப்பு முனையாக அமையும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவ் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்-

## மாவட்ட அடிப்படையில் சந்திரிகாவின் பிரசாரம்

(கொழும்பு)

மாவட்ட அடிப்படையில் நடைபெறும் ஜனாதிபதி தேர்தல் பிரசார கூட்டத்திற்கு பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா கலந்து, கொள்வார் என தெரிவிக்கப்படுகின்றது;

இதே வேளையில் தேர்தல் தொகுதி ரீதியாகவும் கிராம ரீதியாகவும் தேர்தல் பிரசார கூட்டங்கள் நடைபெறும் என தெரிய வருகின்றது.

## சர்வதேச உதவியுடன் மலையகத்திற்கு வீடமைப்பு

## கிரீக்கோட்டு குளம் புனரமைப்பு

எழுதுமட்டுவாள் கிரீக்கோட்டுக் குளம் தேச நிர்மாணிகளால் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

கடந்த கால வெள்ளரிப்பினால் பாதிப்புக்குள்ளாகியிருந்த இக் குளத்தின் அணைக்கட்டுகள் வலுவூட்டப்பட்டுள்ளதுடன் குளமும் ஆழமாக்கப்பட்டுள்ளது.

பிரமான அடிப்படையிலான மூலதன ஒதுக்கீட்டு நிதியினைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கை மூலம் 2000 க்கு மேற்பட்ட கால்நடைகள் நன்மையடைந்துள்ளன.

## பாதிக்கப்பட்ட குள விபரத் திரட்டல்

வவுனியா கோட்டத்திலுள்ள நைனாமடு வட்டத்தில் பராமரிப்பு இன்றியும். மழை வெள்ளத்தாலும் பாதிப்புக்குள்ளான குளங்களின் விபரம் திரட்டும் பணியில் தமிழீழ

## போஷாக்கை மேம்படுத்த நடவடிக்கை அவசியம்

### பிரதேச செயலர் தெரிவிப்பு

[பருத்தித்துறை]

'கிராமிய மக்களின் போஷாக்கை மேம்படுத்த வேண்டிய நடவடிக்கைகளை கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள் போன்ற மக்கள் சேவை நிறுவனங்கள் மேற் கொள்ளவேண்டியது மிக முக்கியமாகும்- இன்றைய நிலையிலே பெருந்தொகையான கிராமிய மக்கள் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டு அல்லல்பட்டு வருவது மிகக் கவலைக்குரியதாகும்'

மேற்கண்டவாறு பருத்தித்துறை பிரதேச செயலர் திரு- ஆ. சிவசுவாமி கிராமிய மக்கள் சேவைநிறுவனங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது.

போஷாக்குள்ள உள்ளூர் உணவு வகைகளை மக்கள் தவிர்த்து இறக்குமதி செய்யப்படும் போஷாக்கற்ற உணவு வகைகளை விரும்பிவருவது நிறுத்தப்படவேண்டும்; உள்ளூர் போஷாக்குஉணவு வகைகளை மக்கள் மத்தியில் நன்கு அறிமுகப்படுத்த வேண்டும். இதைக் கருத்திற் கொண்டே பருத்தித்துறை சத்துணவுக் கூடம் இயங்கிவருகின்றது. சத்துணவுக் கூடத்திலுள்ள போஷாக்கு நிறைந்த உணவுவகைகளை மக்கள் பயன்படுத்த வேண்டும்- இலைக்கஞ்சி, பாம் போஷா பனங்கட்டி உட்பட பல்வேறு வகையான போஷாக்கு நிறைந்த உணவுவகைகள் சத்துணவுக் கூடத்தினால் விநியோகிக்கப்படுகின்றன. இவற்றினை மக்கள் பயன்படுத்தி எமது எதிர்காலச் சந்ததியினரின் போஷாக்கு நிலையை மேம்படுத்த வேண்டும்- (25)

## சேவைக்கால கருத்தரங்கு கொடுப்பனவு குறைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயம் 1 ற்கு உட்பட்ட பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கென கடந்த ஏப்ரல் மாதம் 20-ம் திகதி தொடக்கம் 24-ம் திகதிவரை நடாத்தப்பட்ட 'சேவைக்கால பயிற்சி வகுப்பில்' கலந்து கொண்டவர்களுக்கான கொடுப்பனவு வேலணை ஊர்காவற்றுறை கோட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு குறைத்து வழங்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் நாளொன்றிற்கு நூறு ரூபா வீதம் ஐந்து நாட்களுக்கும் ஐநூறு ரூபா வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டதாகவும், இதன்படி மேற்படி வலயத்திற்குட்பட்ட யாழ்ப்பாணம், நல்லூர் போன்ற ஏனைய கோட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு இரண்டாந் தவணையிலேயே இக் கொடுப்பனவு வழங்கப்பட்டு விட்டதாகவும், தமக்கோகிட்டத்தட்ட ஆறுமாத இடைவெளிக்குப் பின் நாளொன்றிற்கு நாற்பது ரூபாவீதம் இருநூறு ரூபாயே தற்போது வழங்கப்படுவதாகவும் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களின் தரப்பில் கூறப்பட்டது. பிரஸ்தாப தீவகக் கோட்டப் பாடசாலைகள் சிலவற்றின் ஆசிரியர்கள் இக் கொடுப்பனவு குறைப்பை எதிர்த்து 'போர்க் கொடி' தூக்கியுள்ளனர் குறைக்கப்பட்ட கொடுப்பனவிற்கு ஆட்சேபம் தெரிவித்து, பலர் சேர்ந்து கையொப்பமிட்ட ஆட்சேபனைக் கடிதங்கள் கூட வேலணை, ஊர்காவற்றுறைக் கோட்டங்களின் கல்விப் பணிப்பாளருக்கு சில பாடசாலைகளில் இருந்து அனுப்பப்பட்டிருப்பதாக விஷயமறிந்த வட்டாரங்கள் மூலம் தெரியவருகிறது (22)

## பரீட்சையில் சித்திபெற்றனர்

[தொல்புரம்]

கிராம உத்தியோகத்தர் சேவையின் முதலாம் தரத்திற்கான பதவி உயர்வுப் போட்டிப் பரீட்சையில் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் சித்தியடைந்தோர் விபரம் வருமாறு: மு- விஜயரத்தினம் யே 60 புளியங்கூடல், தி- ஸ்ரீஸ்கந்தராசா யே 41 காரை வட மேற்கு; க. சகாதேவன் யே 52 கரம்பன் கிழக்கு, அ- பத்திநாதன் யே 58 நாரந்தனை தெற்கு, எஸ்- கே- சிவலிங்கம் யே 48 காரை நகர் மத்தி. (41)

## தடுப்புக்காவலில் இருப்போர் விரைவில் விடுதலையாவர்

ஐக்கிய முன்னணி அரசாங்கம் சுமார் இருமாத காலத்திற்குள் பேச்சுவார்த்தை மேசைக்கு வந்துவிட்டமை முன்னேற்றகரமானவை மட்டுமல்ல, வரவேற்கத்தக்கதும் ஆகும். நிபந்தனைகள் எதுவுமற்ற பேச்சுவார்த்தைக்குப் பொ. ஐ. முன்னணி அரசாங்கம் தயாராக இருந்தமையே இவ் வெற்றியை அது ஈட்டுவதற்குக் காரணமாகும்.

இந்த ரீதியில் நோக்கும் போது பூர்வாங்கப் பேச்சுவார்த்தைகள் பெரும் நெருக்கடிகள் இன்றி முன்னேறிச் செல்லும் என்றே எதிர்பார்க்க முடிகிறது. ஆனால் இப் பேச்சுவார்த்தையின் எல்லை தொலைவில் உள்ளது மட்டுமல்ல, கடினமானது என்பதும் எவருக்கும் தெரியாத விடயமல்ல.

இந்நிலையில் இன்று ஆரம்பமாகும் பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றமே எதிர்கால பேச்சுவார்த்தைகளுக்கு அடிப்படையாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. இந்த நிலையில் பேச்சுவார்த்தை மிகவும் அவதானமானவையாக நடத்தப்பட வேண்டும் என்பதும் முக்கியமானதோடு பேச்சுவார்த்தையில் மக்களுக்கும் நம்பிக்கையும் ஏற்பட வேண்டும்.

அரசாங்கம் தயாரித்த பேச்சுவார்த்தை நிகழ்ச்சி நிரலின்படி முதல் கட்ட பேச்சுவார்த்தையில் போரினால் ஏற்பட்ட பாதிப்புக்களை சீர் செய்வதற்கு அதாவது புனரமைப்புச் செய்வது குறித்தும் யுத்தநிறுத்தம், போக்குவரத்துப் பாதை திறப்பு தொடர்பான விவகாரங்களும் ஆராயப்படவுள்ளன இவைதவிர வடக்கில் ஜனாதிபதித் தேர்தல் நடத்துவது குறித்தும் பிரஸ்தாபிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்விடயங்களில் பெரும்பாலானவற்றிற்கு ஏற்கனவே விடுதலைப்புலிகளிடம் இருந்து நல்ல சமிக்ஞைகள் கொடுக்கப்பட்டுவிட்டன. ஆனால் அரசாங்கத் தரப்பினால் தான் சில விடயங்களில் தெளிவான தீர்மானங்களை மேற்கொள்ள முடியாது உள்ளதுபோல் தெரிகின்றது

எடுத்துக்காட்டாகக் கூறுவதானால் யுத்தநிறுத்தம் தொடர்பாகவும், போக்குவரத்துப்பாதை தொடர்பாகவும் விடுதலைப்புலிகள் இயக்கம் தெளிவாகவே அறிவிப்புக்களை விட்டுள்ளது. இந்தவகையில் அரசாங்கத்தரப்பில் இருந்தே அதற்குச் சாதகமான பதில் கிடைக்கப் பெறவில்லை என்று கூறலாம்.

இந்தவகையில் பேச்சுவார்த்தையின் முக்கிய அம்சமான இவ்விரு விடயங்களிலும் அரசாங்கத் தரப்பு தமது நிலைப்பாட்டை பேச்சுவார்த்தையின் போது தெளிவுபடுத்த வேண்டி ஏற்படலாம். ஆனால் இவ்விரு விவகாரங்களிலும் ஏற்பட வேண்டிய முன்னேற்றம் அடுத்த கட்டப் பேச்சுகளுக்கு அவசியம் என்பதோடு இதன் முன்னேற்றமே சமாதானப் பேச்சு வார்த்தையில் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டும் விடயமாகவும் இருக்கும்.

இதேசமயம் ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது போன்று இப்பேச்சுவார்த்தை பூர்வாங்கப்பேச்சுவார்த்தை என்பதை அரசாங்கத்தரப்பு நிகழ்ச்சி நிரல் தெளிவாக வெளிக்காட்டுகின்றது. இந்தவகையில் இப்பேச்சுவார்த்தையானது தமிழ்மக்களின் அரசியல் உரிமை குறித்த எந்த விடயத்தையும் தொடவில்லை என்பதும் வெளிப்படை, ஆகையினால் முதலாம் கட்டப் பேச்சுவார்த்தையானது யுத்தத்தினால் தோன்றியுள்ள இடர்களை நீக்கும் பேச்சுவார்த்தை என்றே கொள்ளலாம், ஆனால் இதன் முன்னேற்றமே அடுத்த கட்டத்திற்கான வழியைத் திறக்கும் என்பது நிச்சயம்; அது முன்னேறிச் செல்ல அரசு ஆவன செய்யும் என்பது தமிழ்மக்களின் எதிர்பார்ப்பும் ஆகும்.

## மாவட்ட அடிப்படையில் சந்திரிகாவின் பிரசாரம்

(கொழும்பு)

மாவட்ட அடிப்படையில் நடைபெறும் ஜனாதிபதி தேர்தல் பிரசார கூட்டத்திற்கு பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா கலந்து, கொள்வார் என தெரிவிக்கப்படுகின்றது.

இதே வேளையில் தேர்தல் தொகுதி ரீதியாகவும் கிராம ரீதியாகவும் தேர்தல் பிரசார கூட்டங்கள் நடைபெறும் என தெரிய வருகின்றது.

## சர்வதேச உதவியுடன் மலையகத்திற்கு வீடமைப்பு

- பெ. சந்திரசேகரன்

(டிக்கோயா)

பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து அமைச்சர்பதவிகளைப் பெற சில அரசியல் கட்சிகள் முனைகின்றன. அவர்களது நோக்கம், குறிக்கோள் அனைத்தும் அமைச்சர் பதவியிலேயே உள்ளது. மக்கள் சேவையில் அல்ல. இவர்கள் மக்களுக்கு சேவை செய்ய முன்வருவார்களேயானால் அவர்களுக்காக எனது அமைச்சர்பதவியை விட்டுக் கொடுக்க நான் தயாராகவுள்ளேன்.

இவ்வாறு வர்த்தகவாணிப உணவுத் துறை பிரதி அமைச்சர் திரு. சந்திரசேகரன் தெரிவித்தார், 'டிக்கோயா? தோட்டத்தில் அளிக்கப்பட்ட வரவேற்பின் போது உரையாற்றிய அவர். பொதுஜன ஐக்கிய முன்னணியால் மலையகத்தில் புதிய வீடுகளைக் கட்டுவதற்கு வெளிநாட்டு, உள்நாட்டு உதவிகளுடன் திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது. இங்கு விரைவில் பத்து கிராம சேவகர்கள் நியமிக்கப்படவுள்ளனர். இந்தப்பதவி எனக்கு கிடைத்தது மலையகத்திற்கு கிடைத்த கௌரவம் ஆகும். மலையக மக்களுக்கு உள்ளபிரச்சினைகள் மலையக மக்கள் முன்னணி என்ற மக்கள்சக்தியால் மட்டுமே தீர்க்க முடியுமே தவிர தனிப்பட்ட சந்திரசேகரனால் முடியாது.

## சன.ச.நிலைய செயற்பாடு முக்கியமானதாகும்

(பருத்தித்துறை)

''இன்றைய போராட்ட காலகட்டத்திலே சனசமூக நிலையங்களின் சிறந்த செயற்பாடுகள் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். சனசமூக நிலையங்கள் வெறும் வாசிகசாலைகளாகவன்றி கிராமங்களின் பல்வேறு வகையான அபிவிருத்திகளிலும், போராட்ட நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டும். இதனைக் கருத்திற் கொண்டு சனசமூக நிலையங்களின் செயற்குழு உறுப்பினர்கள் தன்னலமற்ற பொதுச் சேவைகளை வழங்க வேண்டும்''

இவ்வாறு விடுதலைப் புலிகள் அரசியல் நிர்வாக பருத்தித்துறை பிரதேசப் பொறுப்பாளர் சனசமூக நிலையங்களின் உறுப்பினர்களுக்கு நடாத்தப்பட்ட கலந்துரையாடலிலே குறிப்பிட்டார். தம்பசிட்டி மெதடிஸ்த தமிழ் கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இக் கலந்துரையாடல் சனசமூக நிலையங்களின் சமாசத்தலைவர். திருச்சு. திருச்செல்வம் தலைமையில் நடைபெற்றது. தொடர்ந்து உரையாற்றிய திரு தமிழரசன் குறிப்பிட்டதாவது,

சனசமூகநிலையங்கள் பல்வேறு நடவடிக்கைகளிலும் கிராமிய மக்கள் மத்தியில் எழுச்சியை ஊட்டவேண்டும்; கிராமிய மக்களை ஒருங்கிணைத்து அவர்களுக்கு வழிகாட்டி கிராமிய அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் தமிழீழ விடுதலைப் போராட்ட நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்தக் கூடிய வாய்ப்புகள் சனசமூக நிலையங்களுக்கு உண்டு.

பருத்தித்துறை பிரதேச செயலக சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி பொன்னையாவும் உரையாற்றினார். பருத்தித்துறை நகரசபை சனசமூக நிலையங்களின் தலைவர். திரு. வி. சேதுநாயகம் நன்றி தெரிவித்தார் (25)

[illegible]டன் குளமும் ஆழமாக்கப்பட்டுள்ளது.

பிரமான அடிப்படையிலான மூலதன ஒதுக்கீட்டு நிதியினைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கை மூலம் 2000 க்கு மேற்பட்ட கால்நடைகள் நன்மையடைந்துள்ளன.

## பாதிக்கப்பட்ட குள விபரம் திரட்டல்

வவுனியா கோட்டத்திலுள்ள நைனாமடு வட்டத்தில் பராமரிப்பு இன்றியும். மழை வெள்ளத்தாலும் பாதிப்புக்குள்ளான குளங்களின் விபரம் திரட்டும் பணியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் உட்கட்டுமானப் பகுதியினர் ஈடுபட்டுள்ளனர்.

இவ்விபரங்களைத் திரட்டி இதுதொடர்பாக பரிசீலனை செய்யப்பட்டபின் இக் குளங்களை கிராமமக்களின் உதவியுடன்புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## நரோமா பயணிகள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

நரோமா கப்பலில் வரும் 15 ஆந் தேதி பயணம் செய்வதற்கு பணம் செலுத்திய பயணிகளை அன்றைய தினம் காலை 8.00 மணிக்கு பருத்தித்துறை இறங்குதுறைக்கு கவறாது சமுகமளித்து தங்கள் பயணத்தை உறுதிசெய்து கொள்ளும்படி செயற்திட்டப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

[சி]

## பரிசளிப்பு வைபவம்

(தொல்புரம்)

வாரிவளவு நல்லியக்கச் சபையினரால் நடாத்தப்படவுள்ள நவராத்திரி நடன இசைப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் பரிசில் வழங்கல் வைபவம் எதிர்வரும் 16 ஆம் திகதி காலை 8-30 மணி முதல் வட்டுக்கோட்டை யாழ்ரன் கல்லூரியில் அதிபர் ந- பரமசிவம் தலைமையில் நடைபெறும். மேற்படி நிகழ்வில் வலிமேற்கு பிரதேச செயலர் கா- சந்திரராசா பிரதம விருந்தினராகவும், தீவகக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் மா- முகிலன் உட்பட மற்றும் சிலர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பிக்கவுள்ளனர்.

(41)

போன்ற ஏனைய [illegible]களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு இரண்டாந் தவணையிலேயே இக் கொடுப்பனவு வழங்கப்பட்டு விட்டதாகவும், தமக்கோகிட்டத்தட்ட ஆறுமாத இடைவெளிக்குப் பின் நாளொன்றிற்கு நாற்பது ரூபாவீதம் இருநூறு ரூபாயே தற்போது வழங்கப்படுவதாகவும் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களின் தரப்பில் கூறப்பட்டது. பிரஸ்தாப தீவகக் கோட்டப் பாடசாலைகள் சிலவற்றின் ஆசிரியர்கள் இக் கொடுப்ப[illegible]திற்கான பதவி உயர்வுப் போட்டிப் பரீட்சையில் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் சித்தியடைந்தோர் விபரம் வருமாறு:

மு- விஜயரத்தினம் யே 60 புளியங்கூடல், தி- ஸ்ரீஸ்கந்தராசா யே 41 காரைநகர் மேற்கு, க. சகாதேவன் யே 52 கரம்பன் கிழக்கு, அ- பத்திநாதன் யே 58 நாரந்தனை தெற்கு, எஸ்- கே- சிவலிங்கம் யே 48 காரைநகர் மத்தி. (41)

## தடுப்புக்காவலில்இருப்போர் விரைவில் விடுதலையாவர்

(கொழும்பு)

தடுப்புக்காவலில் இருக்கும் பல்வேறு தரங்களை சேர்ந்தவர்களும் விரைவில் விடுதலை செய்யப்பட இருப்பதாக கூறப்படுகிறது-

நீதி அமைச்சு பேச்சாளரை மேற்கோள் காட்டி வெளியிடப்பட்டிருக்கும் ஒரு செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகவும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இவர்கள் விரைவில் விடுதலை செய்யப்பட இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது-

## கமக்காரர் அறிமுக அட்டை வன்னியில்வழங்கப்படுகிறது

போராட்ட காலத்தில் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் நோக்குடன் சீரான எரிபொருள் மற்றும் உள்ளீடு விநியோகங்களை மேற்கொண்டு விவசாயிகள் நன்மையடையுமுகமாக அறிமுகப்படுத்தப்பட்ட கமக்காரர் அறிமுக அட்டை விநியோகம் தற்போது வன்னி மாவட்டத்தில் நடைபெற்று வருகிறது.

தற்போது வவுனியாக்கோட்டம் நயினாமடுப்பிரதேசத்தில் இவ் அறிமுக அட்டை விநியோகம் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும், ஏனைய பகுதிகளுக்கும் இது விஸ்தரிக்கப்படவுள்ளதால் கிராமிய உற்பத்திக்குழுக்களுடன் தொடர்பு கொண்டு இவ் அறிமுக அட்டையைப் பெற விண்ணப்பிக்குமாறு இப்பிரதேசங்களைச் சேர்ந்த விவசாயிகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் கேட்டுள்ளனர்:

## தம்புள்ளவில் வயிற்றோட்டம்

(கொழும்பு)

தம்புள்ள பகுதியில், வயிற்றோட்ட நோய் ஆரம்பித்திருப்பதாகவும், ஒருவர் பலியாகியிருப்பதாகவும் கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

சுகாதார மற்ற கழிவுகள் மற்றும் குடிநீர்ப் பற்றாக்குறையே இந்நோய்க்கு காரணமென சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

### 1994-10-13 வியாழன் இரவு

8.01 ற்கு சொல்லுங்கள் பார்க்கலாம்
8.10 ற்கு சித்தமருத்துவக் குறிப்புக்கள்
8.20 ற்கு உழைப்போம் உயர்வோம் நிகழ்ச்சியில் ''யுத்தசேத விபரம் சேகரிப்பு'' உரையாடல்
8.30 ற்கு செய்திகள்
8.40 ற்கு ஏட்டிலிருந்து நிர்வாகக் கலையைத் தெரிந்து கொள்ளுங்கள் என்றநூலிலிருந்து ''ஜப்பானின் அணுகுமுறை'' எனும் கட்டுரையின் சில பகுதிகள்
8 50 ற்கு மலரும் மொட்டுக்கள்

### 1994-10-14 வெள்ளி காலை

7. 02 ற்கு மாவீரவணக்கம்
7. 15 ற்கு மணியாரம்
7. 30 ற்கு செய்திகள்
7. 35 ற்கு பத்திரிகைச் செய்திகள்
7.40 ற்கு தாயகப்பாடல்கள் என்பன இடம் பெறும்.

# உலகில் பலம்மிகு கெரில்லா அணியாக விடுதலைப் புலிகள் திகழ்கின்றனர்

## பாராளுமன்றத்தில் காமினி திசாநாயக்க

(கொழும்பு)

உலகில் மிகவும் பலம் வாய்ந்த கெரில்லா அமைப்பாக விடுதலைப் புலிகள் திகழ்கின்றனர். பல உலக சஞ்சிகைகள் கூட இவ்வாறே கூறுகின்றன என சிறிலங்காவின் எதிர்க் கட்சித் தலைவர் காமினி திசாநாயக்கா பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அவசர காலச் சட்ட நீடிப்பு தொடர்பான விவாதத்தின் போது உரையாற்றிய காமினி திசாநாயக்கா கூறுகையில், இந்திய அரசின் விசேட தூதுவராக வருகை தந்த வர்மாவுடன் இடம்பெற்ற பேச்சு வார்த்தைகள் தொடர்பாக இன்று வரை விபரம் எதுவும் வெளியிடப்படவில்லை. சர்வதேசமயப்படுத்தப்பட்டுவிட்ட வடக்கு - கிழக்குப் பிரச்சினை தொடர்பாக தற்போது இங்கு நடைபெறும் நாடகத்தை யாவரும் விழிப்புடன் அவதானித்து வருகின்றனர். அவை தொடர்பாக சபைக்கு அறிவிப்பது அரசின்கடமையாகும்.

நாட்டின் பாதுகாப்பு குறித்த பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் இலக்கு மிகவும் கடினமானது என்பதை நான் அறிவேன் எனக்கும் அரசியல் தலைவர்களுக்கும் கொலை அச்சுறுத்தல்கள் இருந்து வருகின்றன. இத்தகைய நிலையில் நீங்களோ, நாங்களோ சுதந்திரமான ஜனநாயகமான சமூகத்திற்கான பாதையை எவ்விதம் திறந்து விடப்போகிறோம் என்பதே கேள்வியாகும்.

புலிகளுடன் ஐ. தே. கவும் ஒன்பது மாதங்களாகப்பேச்சு வார்த்தை நடத்தியது, ஆனால் தீர்வை எட்ட முடியவில்லை. பாதுகாப்புத்துறைக்காக ஆண்டு தோறும் 2500 கோடி ரூபா செலவழிக்கிறது. 6 வருடங்களாக மகாவலிக்காக செலவிடப்பட்டது இதன் அரைப்பங்கேயாகும்.

ஒருவராலும் வெற்றி கொள்ள முடியாத யுத்தம் இதுவென லலித் அத்துலத்முதலி ஒருதடவை தெரிவித்திருந்தார். இப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நடவடிக்கைகள் தொடர வேண்டும் என்றே நாமும் கருதுகிறோம்.

உலகில் மிகவும் பலம் வாய்ந்த கெரில்லா அமைப்பு என புலிகள் அழைக்கப்படுகின்றனர். எமது படையினரது தொகையும் மிகவும் அதிகமாகும்: தேவையற்ற விதத்தில் பாரிய இராணுவத்தை நாம் கொண்டுள்ளோம். இந்நிலை, நிலைமையை மேலும் சிக்கலாக்கியுள்ளது.

இங்கு கொழும்பு நகரம் வரை தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் உள்ளது. இத்தகைய சூழ் நிலையில் பேச்சுவார்த்தைக்கான காரணங்கள் தொடர்பாக பிரதி பாதுகாப்பு அமைச்சர் இச் சபைக்கு தெரிவிக்க வேண்டும் என்றார்.

# வட-கிழக்கில் படையினரால் கைதாகிய பொதுமக்கள்குறித்து அக்கறையில்லை

## திருகோணமலை மாவட்ட பா. உ. தங்கத்துரை

(கொழும்பு)

தெற்கில் எழும்புக் கூடுகள் தோண்டி எடுக்கப்படும் போது வடக்கு, கிழக்கில் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு காணாமல் போன பல்லாயிரக் கணக்கானோர் பற்றி யாரும் கவனத்தில் கொள்வதாக தெரியவில்லை என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே. தங்கத்துரை கூறியுள்ளார்.

கடந்த வார இறுதியில் அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கும் போது, கிழக்கில் பல்லாயிரக் கணக்கானோர் இராணுவத்தினரால் கைதாகி காணாமற் போயுள்ளனர், கிழக்குப்மாறு பல்கலைக்கழகத்தில் வைத்தே 158 பேர் கைதாகி வாழைச்சேனை இராணுவ முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டனர். இவர்கள் குறித்து எந்தவித தகவலும் இல்லை; மனித உரிமை நிறுவனங்களுக்கு காணாமற் போனோரின் உறவினர்கள் அறிவித்தும் பலன் கிட்டவில்லை புதிய அரசாவது இது தொடர்பாக விசாரணை நடத்த முன்வர வேண்டும் என அவர் தரிவித்தார்.

# மா.ந.சபை வேலைத்திட்டம் உடன் நிறுத்தப் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையினால் அதன் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவந்த எம்.ரீ. ஐ.பியின் கீழான வேலைத் திட்டங்களை உடன் நிறுத்து வடக்கு- கிழக்கு மாகாண அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பான வடக்கு- கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரினால் கையொப்பமிடப்பட்டுள்ள அவசர வானொலிச் செய்தி ஒன்று நேற்று யாழ். மாநகர சபைக்கு கிடைக்கப்பெற்றுள்ளது என அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன்படி பகிரப்படாத முதலீட்டின் கீழ் நடுத்தர முதலீட்டுத் திட்டத்திற்கு ஈடு செய்கின்ற நன்கொடை விதிகள் - 94 இன் கீழான வேலைகளையே (எம்.ரீ ஐ.பி) நிறுத்துமாறு வடகிழக்கு உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இதனை அடுத்து யாழ். மாநகரசபை மேற்படி வேலைத்திட்டத்தின் கீழானவேலைகளை நிறுத்தியுள்ளதாக தெரியவருகின்றது.

இதேவேளை யாழ். மாநகரசபை ஆணையாளர் பொ. பாலசிங்கம் அவர்கள் திருகோணமலையில் தங்கியுள்ளதாக தெரியவருகின்றது (பா)

உலக உலாவைப் படியுங்கள்...

உலகை வலம் வந்த உணர்வைப் பெறுவீர்கள்

பூமியில் மனிதன்!
சந்திரனில் மனிதனின் காலடி!!
நாளை செவ்வாயில் மனிதன்!!!

ஆம்!!

அன்று சந்திரனில் காலடி வைத்தான் மனிதன்!!
நாளை செவ்வாயில் காலடி வைக்கப் போகிறான்!!!
என்ன..? நம்பமுடியவில்லையா...? ஆச்சரியமாகவுள்ளதா?

# சந்திரிகாவின் சிங்கப்பூர் விஜயம் ஏற்படுத்தியுள்ள புதிய சர்ச்சை

பிரதமர் சந்திரிகாவின் நான்கு நாள் சிங்கப்பூர் விஜயம் தொடர்பாக நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர்களுக்கும் செய்தியாளர்களுக்கும் இடையில் பெரும் சர்ச்சை எழுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சமாதானப் பேச்சுக்கள், ஜனாதிபதி தேர்தல் என முக்கிய சம்பவங்கள் இடம்பெறவுள்ள இச்சமயத்தில் பிரதமர் ஏன் சிங்கப்பூர் சென்றார். யாராவது அழைத்ததன் பேரில் அங்கு சென்றாரா, யாருடையதாவது ஆலோசனை பெற அங்கு சென்றாரா என பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்பிய போது, பிரதமர் தனிப்பட்ட விஜயமாகவே சிங்கப்பூர் சென்றதாக செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்ட தகவல் துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்காவும் அரசியலமைப்பு விவகார அமைச்சர் பீரிசும் பதிலளித்தனர்.

இதன்போது அமைச்சர் பீரிஸ், மனித புதைகுழி விவகாரம் குறித்து தகவல் தெரிவிக்க முற்பட்ட போது, நீங்கள் பிரதமரின் சிங்கப்பூர் விஜயத்தையே புதைகுழியில் போட்டு மூடிமறைக்க பார்க்கிறீர்கள், இந்த புதை குழி மர்மம் என்ன என்பதை முதலில் கூறுங்கள் என செய்தியாளர்கள் அமைச்சரிடம் கேட்டனர். இதனால் இரு தரப்பினரிடையேயும் வாக்குவாதங்கள் இடம்பெற்றன.

# வட தமிழீழ கலைத்திறன் போட்டிக்கு யாழ் மாவட்டத்தில் தெரிவானோர்

[யாழ்ப்பாணம்]

வடதமிழீழ பாடசாலைகளுக்கிடையேயான தமிழ் மொழி கலைத்திறன் போட்டிகள் எதிர்வரும் 21, 22ம் திகதிகளில் கிளிநொச்சியில் நடைபெறவுள்ளன-

பாடசாலை மாணவர்களிடையே தமிழ்மொழித்திறன், கலை, இலக்கிய ஆற்றல்களை வளர்ப்பதற்கு ஊக்கமளிக்குமுகமாக பாடசாலை, கோட்டமற்றும் மாவட்ட மட்டங்களில் நடாத்தப்பட்டு வரும் போட்டிகள் இம் முறை வட தமிழீழத்தின் ஐந்து மாவட்டங்களிலிருந்தும் முதலிடம்பெற்ற நிகழ்ச்சிகளை கொண்ட வரையறுக்கப்பட்ட போட்டியாக நடை பெறுகின்றன-

யாழ் மாவட்டத்தில் நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்று வடதமிழீழப் போட்டிகளில் கலந்து கொள்ள கிளிநொச்சி செல்ல இருப்போரின் பெயர் விபரங்களும் நிகழ்ச்சிகளும் வருமாறு:

கட்டுரை பிரிவு 3 ம- சுதர்சனா [யாழ்ப்பாணக்கல்லூரி] கட்டுரை பிரிவு 4 சி. சிவதாஸன் (இடைக்காடு ம-வி) கவிதை பிரிவு 3 ச: மதனமௌலி (புனிதஹென்றி அரசர் கல்லூரி), கவிதை பிரிவு 4 ச. சுதர்சினி (உரும்பிராய் இந்து கல்லூரி) சிறுகதை பிரிவு 3 ம பிரவீனன் (யூனியன் கல்லூரி) சிறுகதை பிரிவு 4 ச. சர்மிளா (யூனியன் கல்லூரி) பேச்சு பிரிவு 2, கு. தர்சிகா(கொக்குவில் இந்து) பேச்சு பிரிவு 3, சி. காயத்திரி [உடுவில் மகளிர் கல்லூரி] பேச்சு பிரிவு 4, பா. டொயிசி கிருசாந்தினி (பளை ம.வி) பாஓதல் பிரிவு 2 பா. தயாபரன் (மானிப்பாய் இந்து) பா ஓதல் பிரிவு 3 கு-பிரமிளா (மகாஜனாக்கல்லூரி) பா ஓதல் பிரிவு 4, ம. உதயதிவ்யமணி (மீசாலை வீரசிங்கம் ம-வி) செந்நெறி இசைப்பிரிவு 2 தனி ர. தாரணி [வேம்படி மகளிர் கல்லூரி) செந்நெறி இசைப் பிரிவு 2 குழு. மானிப்பாய் மகளிர் கல்லூரி செந்நெறி இசைப் பிரிவு 3 தனி.ரி பிரியவதனன் [சம்பத்திரிசியார் கல்லூரி) செந்நெறி இசைப்பிரிவு 3 குழு. வேம்படி மகளிர் கல்லூரி செந்நெறி இசைப்பிரிவு 4 தனி ந பிரசாந்தி (அருணோதயக் கல்லூரி) செந்நெறி இசைப்பிரிவு 4, குழு அருணோதயக் கல்லூரி. கிராமிய இசைப்பிரிவு 2 தனி லோவாசுகி [பண்ணாகம் மெய்கண்டான் ம. வி] கிராமிய இசைப் பிரிவு 2 குழு கனகரட்ணம் ம. ம: வி கிராமிய இசைப் பிரிவு 3 தனி பகீதரன் [பண்ணாகம் மெய்கண்டான் ம.வி) கிராமிய இசைப்பிரிவு 3 குழு அருணோதயக் கல்லூரி கிராமிய இசைப்பிரிவு 4 தனி நி நிர்மலா (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி) கிராமிய இசைப் பிரிவு 4 குழு [நெல்லியடி ம. ம வி] குறட்பா அறிவு 2 நவாலி அட்டகிரி சைவ வி குறட்பா அறிவு 3 கொழும்புத்துறை சென் யோசவ் வி கிராமிய நடனம்பிரிவு 2 குழு திருக்குடும்பக் கன்னியர் மடம் ம, வி கிராமிய நடனம் பிரிவு 3 குழு வல்வை மகளிர் ம, வி கிராமிய நடனம் பிரிவு 4 குழு சாவகச்சேரி மகளிர் கல்லூரி சிறுவர் நாடகம் பிரிவு 1 சுதுமலை சிம்மயபாரதி வி சிறுவர் நாடகம் பிரிவு 2 புனித றோக் வித்தியாலயம் நவீன நாடகம் பிரிவு 3 புனித சாள்ஸ் வித்தியாலயம் நவீன நாடகம் பிரிவு 4 டிறிபேக் கல்லூரி.

சா. கரவர்த்தனா

விடுவிக்கப்படும் போர்க் கைதிகள் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்திடம் ஒப்படைக்கப்படுவார்கள் எனவும் ரூபவாஹினி செரிவித்தது.

விபத்தில்

குள்ளானதால் படுகாயமடைந்தார்- இவர் உடன் யாழ்- போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்- உடுப்பிட்டியைச் சேர்ந்த ரி- அப்புதுரை (வயது 60), கொக்குவிலைச் சேர்ந்த கே- ஆனந்தன் (வயது 23), அச்சுவேலியைச் சேர்ந்த இராமசாமி

மழை கால

தடுப்பதற்கும், கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கும் மாநகர சபை நடவடிக்கை எடுத்துள்ளது:

குறிப்பாக வடிகால்களில் நீர் தேங்கியிருக்காமலும், குப்பை கூழம் ஒழுங்கு முறையில் எடுத்துச் செல்லவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது- அத்துடன் உணவுச் சாலைகள் கண்காணிப்பு. சந்தையில் இறைச்சி மீன் வேறு உணவுப் பொருள் விற்பனை கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது- விசேடமாக நோய்க்காவி ஒழிப்புத் திட்டத்தில் வீடுவீடாக சுகாதார உதவியாளர்கள் சென்று ஆலோசனை வழங்கவும், சூழல் குறைகளை நிவர்த்தி செய்யவும் உதவுவர்-

பொது மக்கள் எமதுசெயற்பாட்டிற்கு ஒத்துழைப்புத் தந்தால் மட்டும் எமது பணி நிறைவேறும் உதாரணமாக பொது இடங்களில் குப்பை

உலக உலாவைப் படியுங்கள்...

உலகை வலம் வந்த உணர்வைப் பெறுவீர்கள்

பூமியில் மனிதன்!
சந்திரனில் மனிதனின் காலடி!!
நாளை செவ்வாயில் மனிதன்!!!

**ஆம்!!**

அன்று சந்திரனில் காலடி வைத்தான் மனிதன்!!
நாளை செவ்வாயில் காலடி வைக்கப் போகிறான்!!!
என்ன..? நம்பமுடியவில்லையா...? ஆச்சரியமாகவுள்ளதா?
இன்றே வாருங்கள் வாங்கிப் படியுங்கள் ஒக்ரோபர் மாத

# "உலக உலா" வை

சந்தேகம் பறந்துவிடும்

- ★ இன்றைய உலக விவகாரங்கள்
- ★ ஹெய்ற்றியின் அவலம்
- ★ ருவாண்டாவின் சோகம்
- ★ பொஸ்னிய யுத்தம்
- ★ உங்கள் உடலைப் பற்றிய புதிர்
- ★ முகாமைத்துவம்
- ★ தொலைந்து போன ஆதிகால மிருகங்கள்
- ★ மக் (MAC) தாக்குதல்
- ★ ஓட்டம் (Run) எடுக்கும் இயந்திரம்
- ★ ஷின்லர்ஸ் லிஸ்ட்
- ★ நாசாவின் வெற்றியும் தோல்வியும்
- ★ மருத்துவம்

ஆகிய சிறப்பான கட்டுரைகளையும் இன்னும் பல அரிய விடயங்களையும் தன்னகத்தே தாங்கி அனைத்துலக தரத்திற்கு நிகராக இம்மாத

**உலக உலா** வெளிவந்துள்ளது.

★ ★ சகல புத்தகக் கடைகளிலும் கிடைக்கும்

(சி-10495)

வித்தன.

இதன்படி பகிரப்படாத முதலீட்டின் கீழ் நடுத்தர முதலீட்டுத் திட்டத்திற்கு ஈடு செய்கின்ற நன்கொடை விதிகள் - 94 இன் கீழான வேலைகளையே (எம்.ரீ ஐ.பி) நிறுத்துமாறு வடகிழக்கு உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இதனை அடுத்து யாழ். மாநகரசபை மேற்படி வேலைத்திட்டத்தின் கீழான வேலைகளை நிறுத்தியுள்ளதாக தெரியவருகின்றது.

இதேவேளை யாழ். மாநகரசபை ஆணையாளர் பொ. பாலசிங்கம் அவர்கள் திருகோணமலையில் தங்கியுள்ளதாக தெரியவருகின்றது (பா)

நிகழ்ச்சிகளும் வருமாறு:

கட்டுரை பிரிவு 3 ம- சுதர்சனா [யாழ்ப்பாணக்கல்லூரி] கட்டுரை பிரிவு 4 சி. சிவதாஸன் (இடைக்காடு ம-வி) கவிதை பிரிவு 3 ச: மதனமௌலி (புனிதஹென்றி அரசர் கல்லூரி), கவிதை பிரிவு 4 ச. சுதர்சினி (உரும்பிராய் இந்து கல்லூரி) சிறுகதை பிரிவு 3 ம பிரவீனன் (யூனியன் கல்லூரி) சிறுகதை பிரிவு 4 ச. சர்மிளா (யூனியன் கல்லூரி) பேச்சு பிரிவு 2, கு. தர்சிகா (கொக்குவில் இந்து) பேச்சு பிரிவு 3. சி. காயத்திரி [உடுவில் மகளிர் கல்லூரி] பேச்சு பிரிவு 4, பா. டொயிசி கிருசாந்தினி (பளை ம.வி) பாஓதல் பிரிவு 2 பா. தயாப

மிய இசைப்பிரிவு 4 கனி நி நிர்

சா கரவர்த்தனா

விடுவிக்கப்படும் போர்க் கைதிகள் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்திடம் ஒப்படைக்கப்படுவார்கள் எனவும் ரூபவாஹினி செரிவித்தது.

## விபத்தில்

குள்ளானதால் படுகாயமடைந்தார்- இவர் உடன் யாழ்- போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்- உடுப்பிட்டியைச் சேர்ந்த ரி- அப்புத்துரை (வயது 60), கொக்குவிலைச் சேர்ந்த கே- ஆனந்தன் (வயது 23), அச்சுவேலியைச் சேர்ந்த இராமசாமி (வயது 72), எம். தர்ஜினி (வயது 5] ஆகியோரே ஏனைய நான்கு விபத்துக்களிலும் காயமடைந்து யாழ்- போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்கள் ஆவர்- [இ]

குப்பை கூழம் ஒழுங்கு முறையில் எடுத்துச் செல்லவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது- அத்துடன் உணவுச் சாலைகள் கண்காணிப்பு. சந்தையில் இறைச்சி மீன் வேறு உணவுப் பொருள் விற்பனை கண்காணிப்பு தீவிரப் படுத்தப்பட்டுள்ளது- விசேடமாக நோய்க்காவி ஒழிப்புத் திட்டத்தில் வீடுவீடாக சுகாதார உதவியாளர்கள் சென்று ஆலோசனை வழங்கவும், சூழல் குறைகளை நிவர்த்தி செய்யவும் உதவுவர்-

பொது மக்கள் எமது செயற்பாட்டிற்கு ஒத்துழைப்புத் தந்தால் மட்டும் எமது பணி நிறைவேறும் உதாரணமாக பொது இடங்களில் குப்பை கூழம் போடுவது அசுத்தப் படுத்துவது போன்றவற்றை தவிர்த்தல் வேண்டும் உணவு சம்பந்தமான குறைபாடுகள் எங்கு காணப்படினும் தகவல் தந்தால் நடவடிக்கை எடுக்க உதவியாக இருக்கும்

### பிரேமாவின் கொள்கைகளை பின்பற்றினால்

# சந்திரிகாவை ஆதரிக்க ஹேமா பிரேமதாசா தயார்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் கொள்கைகளை அமுலாக்க சந்திரிகா குமாரதுங்கா முன்வந்தால் அவருக்கும் உதவி வழங்க தயார். இப்போது காமினி திசாநாயக்கா பிரேமதாசாவின் கொள்கைகளை முன்னெடுப்பதாக உறுதியளித்தமையினாலேயே அவருக்கு ஆதரவு வழங்க முன்வந்தேன் என முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் மனைவியான ஹேமா பிரேமதாசா கூறியுள்ளார்.

அரசியலில் நான் ஈடுபடுவதை பொறுக்காதவர்கள் சேறுவாரிப் பூச முனைகிறார்கள். இவ்வாறான நடவடிக்கைகளுக்கு நான் அஞ்சப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## கிணற்றில்வீழ்ந்து மரணம்

(யாழ்ப்பாணம்)

கிணற்றில் நீர் அள்ளும் போது தவறி விழுந்ததாக கூறப்படும் நான்கு குழந்தைகளின் தாயொருவர் பரிதாபகரமாக மரணமடைந்துள்ளார்.

கோண்டாவில் கிழக்கில் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் இச் சம்பவம் நடந்துள்ளது.

இதன்போது ராமநாதன் கமலாதேவி (வயது 40) என்னும் நான்கு பிள்ளைகளின் தாயாரே மரணமானவராவார். (சி)

## வட-கிழக்கிற்கான

ள்ளது தெரிந்ததே.

அண்மையில் கொழும்பில் கூடிய இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் பொதுச் சபைக் கூட்டத்தில் இச்சங்கத்தின் கணக்காய்வு அறிக்கை மீள் பரிசீலிக்கப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரியவருகிறது. (இ)

## மீனவரை

கடலில்குதித்து கரைக்குவந்து சேர்ந்தனர்- கடற்படையினர் பொலிகண்டிவரை வந்து பின்னர் திரும்பி காங்கேசன்துறை சென்றனர்- (யோ)

## காலையில்

விமானம் மூலம் பலாலி வரும் இத் தூதுக்குவினர் உடனடியாகவே உலங்குவானூர்தி மூலம் யாழ். பல்கலைக்கழக மைதானம் வந்திறங்குவர். இவர்களின் உலங்குவானூர்தி காலை 9 மணியளவில் பல்கலைக்கழக மைதானத்தை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குழுவினரை அங்கு வைத்து விடுதலைப் புலிகள் வரவேற்று பூர்வாங்கப் பேச்சுகள் நடைபெறும் சுண்டிக்குளி பகுதியில் உள்ள அரசியல் தலைமையகத்திற்கு அழைத்துச் செல்வர். அரச பிரதிநிதிகள் தரப்பினருக்கும் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுக்கு இடையிலான முதற்கட்ட பேச்சுக்கள் இன்று மாலல ஆரம்பிக்கலாம் என கொழும்புச் செய்திகள் தகவல் வெளியிட்டுள்ளன.

# மரண அறிவித்தல்கள்

## சவிரிமுத்து ஜோர்ச் அரியநாயகம்

சவிரிமுத்து ஜோர்ச் அரியநாயகம் காலமானார். அன்னார் காலஞ்சென்ற சவிரிமுத்து (சங்குப்பிள்ளை வசாவிளான்) இனதும் மரியநாயகியினதும் மகனும், பொன்றோஸ் (அவுஸ்திரேலியா), S E, ஆனந்தராசா, S A: குலநாயகம் (அவுஸ்திரேலியா); வேதநாயகம் (வவுனியா), சிவராசா (ஜேர்மனி), நீற்றா. றோசா (அவுஸ்ரேலியா), இமெல்டா கல்குடா, யேசுராசா (U.K) ஆகியோரின் சகோதருமாவார். அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு 13-10-94 மாலை 3 00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்கப்படுகின்றனர்.

தகவல்:

ச. இ. ஆனந்தராசா
(சகோதரன்)

6/1 மாட்டின் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(9673)

## சின்னையா வீரசிங்கம்

கைதடியைச் சேர்ந்த சின்னையா வீரசிங்கம் (இளைப்பாறிய எழுதுநர் சமநல சேவை திணைக்களம் யாழ்ப்பாணம்) அகாலமரணமானார், இவர் அளவெட்டியைச் சேர்ந்த திருமதி வீரசிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர் மன்னார்) என்பவரின் கணவரும், ஜெயந்தி (எழுதுநர் சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்) என்பவரின் தந்தையும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று மாலை (13-10-94) பிற்பகல் 3.00 மணிக்கு கைதடி இல்லத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல். வீ. ஜெய்ந்தி
(மகள்)

கோகுலம்.
கண்டி வீதி,
கைதடி,

(சி-10506)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது,